# சுதந்திரம் காப்போம

CONNEMARA PUBLIC LIBRARY
6 - OCT 1965
MADRAS

நெ. து. சுந்தரவடிவேலு

முருகன் & கம்பெனி
சென்னை - 2

முதற் பதிப்பு—மே, 1965

3157

2474/65
127646

விலை : ரூபாய் ஒன்று

382

ஏஷியன் பிரிண்டர்ஸ்
சென்னை-5.

MARA PUBLIC LIBRARY
OCT 1965
MADRAS

# காணிக்கை

சீமானகப் பிறந்தவராம்
கோமானக வாழ்ந்தவராம்
விடுதலை வேட்கை மிக்கவராம்
வெஞ்சிறையில் இருந்தவராம்
அஞ்சாத நெஞ்சினராம்
தியாகத்தின் திருவுருவாம்
நேர்மையின் இருப்பிடமாம்
காந்தி நெறி நின்றவராம்
விடுதலைப் போரின் தளபதியாம்
நவபாரதத்தின் சாரதியாம்
ஓயாத உழைப்பினராம்
கடமையே மூச்சினராம்
மனிதகுலக் காவலராம்
குழந்தைகளின் தோழராம்
ஆசியாவின் பேரொளியாம்
மாந்தருள் மாணிக்கமாம்
மாமேரு அனைய நேருவுக்கு
அஞ்சலி.

4 - OCT 1965
MADRAS

# முன்னுரை

பேச்சும் எழுத்தும் என் பணியில் இழைந்துள்ளன. என் பேச்சு சிற்சில வேளை, வானொலி வழியில் வருவதுண்டு. அப்படி வந்தவற்றுள் பத்தும், கட்டுரைகளாக வெளிவந்தவற்றுள் இரண்டும் 'சுதந்திரம் காப்போம்' என்ற இந்நூலில் இடம் பெறுகின்றன. 1964-ஆம் ஆண்டு மே திங்கள் இறுதியில், நேரு பெருமான் மறைந்தபோது எழுதிய – ஆனால் வெளியிடாத – 'கண்ணீரோ காணிக்கை' என்ற கட்டுரையும் இதில் சேர்ந்துள்ளது. என், எண்ண அலைகளைத் தாங்கிய அன்பர்கள், 'சுதந்திரம் காப்போம்' என்ற இந்நூலையும் விரைந்து ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

இதில் வரும் கருத்துகளுக்கு நானே பொறுப்பு. அவற்றில் குற்றமிருப்பின், நானே ஏற்கிறேன்.

இதை வெளியிட இசைவுதந்த தமிழ்நாட்டு அரசினருக்கு என் நன்றி. சென்னை, திருச்சி வானொலி நிலையத்தாருக்கும் நன்றி. இந்நூலை வெளியிடும், முருகன் கம்பெனியாருக்கும் இதை ஒப்பு நோக்கி உதவிய தோழர்களுக்கும் அஃதே.

சென்னை,
20-5-1965.

நெ. து. சுந்தரவடிவேலு

CONNEMARA PUBLIC LIBRARY
6 - OCT 1965
MADRAS

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கண்ணீரோ காணிக்கை ... | 1 |
| 2. | சுதந்திரம் காப்போம் ... | 4 |
| 3. | நாடு காக்க, வாரீர் ... | 12 |
| 4. | நாட்டுப் பாதுகாப்பில் பள்ளிகளின் பங்கு ... | 17 |
| 5. | நாட்டுப் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பங்கு ... | 25 |
| 6. | செலவைக் குறைப்போம் ... | 33 |
| 7. | பள்ளிகளில் அன்னதானம் ... | 41 |
| 8. | பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் ... | 49 |
| 9. | "ஞானத் தந்தை" திட்டம் ... | 59 |
| 10. | தேசீய விளையாட்டு வாரம் ... | 71 |
| 11. | பயணக் கதை ... | 78 |
| 12. | இங்கிலாந்தின் கல்விமுறை ... | 88 |
| 13. | அமெரிக்காவில் கண்டதும் கேட்டதும் ... | 96 |

6 - OCT 1965
MADRAS



# கண்ணீரோ காணிக்கை



கண்ணீர்—இதைச் சிந்தாதோர் உண்டோ? இல்லை. பச்சிளங் குழந்தை முதல் படுத்த படுக்கையாயிருக்கும் பாட்டிவரை அறிந்தது கண்ணீர். சொரிந்தது கண்ணீர். பலமுறை சொரிந்தது கண்ணீர்.

சென்ற இரு வாரங்களாக உலகம் சொரிந்ததும் கண்ணீரே. இவ்விரு வாரங்களில் மனித உணர்ச்சியுடையோர் இருந்த இடமெல்லாம் கண்டது கண்ணீரே! யாருக்காகக் கண்ணீர்? எதற்காகக் கண்ணீர்? நேருவிற்காகக் கண்ணீர்; அவர் மறைவிற்காகக் கண்ணீர்.

கடல் பொங்கினும் கலங்காத உள்ளத்தினரும் சொட்டுச் சொட்டாகச் சிந்தினர் கண்ணீரை. சொட்டுச் சொட்டாக மட்டுமா கண்ணீர்? சாரலாகக் கண்ணீர்; தூறலாகக் கண்ணீர்; பெருமழையாகக் கண்ணீர். எங்கும் கண்ணீர். இமயத்தின் உச்சியிலே கண்ணீர். குமரி முனையிலே கண்ணீர். இத்தனை கண்ணீரும் அந்நல்லவருக்காக; அவ்வல்லவருக்காக.

நேரு, பிறந்தது மாளிகையில்; வளர்ந்தது மாளிகையில்; படித்ததும் மாளிகை வாசிகளோடு. நினைத்தது

எதை? மாளிகை மகிழ்ச்சிகளையா? அல்ல. நினைத்தது, நலிந்தோரை; அடிமைப்பட்டோரை; வாழ வழிவகையற்றோரை; குடிசைகளில் முடங்கிக் கிடந்தோரை.

சிறந்ததை, நினைப்பவர் பலர்; உழைப்பவரோ சிலர். முடிப்பவரோ அதிலும் சிலர். அச்சிலரில் ஒருவர் மாந்தருள் மாணிக்கம், மனிதகுலக் காவலர், பண்டித நேரு.

அவர் சிந்தையெல்லாம், பாரதத்தின் விடுதலைக்கே; மக்களின் நல்வாழ்விற்கே; உழைப்பெல்லாம், நாட்டின் சுதந்திரத்திற்கே; நானிலத்தின் அமைதிக்கே; கோணமல், அடுத்தடுத்து, சென்றதெல்லாம் சிறைக்கே.

தம் தனிவாழ்வும், குடும்ப நலனும், தாய்நாட்டின் திருவடிக்கே காணிக்கையாக்கி வாழ்ந்து, பாரதத்தின் விடுதலையைப் பெற்றுக்காத்த பெருமகனை, நேருவெனும் நன்மகனை, 'தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே' என்னும் பேரொளியைக் காணும் தலையெல்லாம் வணங்குவதில் வியப்பேது? சிந்திக்கும் சிந்தையெல்லாம் கண்ணீராக உருகுவது இயல்பேயன்றோ!


நாம், இதற்கும் அதற்கும் சிந்தியது கண்ணீர், எதெதற்கோ சிந்தியது கண்ணீர்; இவருக்கும் அவருக்கும் சிந்தியது கண்ணீர். சே! இதுதானா நேருவிற்கும் காணிக்கை?


'நமக்குத் தொழில் நாட்டிற்குழைத்தல்; இமைப பொழுதும் சோராதிருத்தல்' என்று காலமெல்லாம் உழைத்த உத்தமருக்குக் காணிக்கையாக்க, கண்ணீ மட்டுந்தானா உண்டு? வேறொன்றும் இல்லையா?

உழைப்பின் சிகரத்திற்குப் பொருத்தமான காணிக்கை உழைப்பன்றோ? 'வறுமையொழிய, வருத்தமழிய, வையம் முழுதும் வன்மை யொழிய' அல்லும் பகலும் அயராது பாடுபட்ட, உலகத்தின் தலை சிறந்த உழைப்பாளிக்கு, நாம், வெந்நீரையும், வியர்வையையும், செந்நீரையும் காணிக்கையாக்கலாகாதா? உழைப்பால், அஞ்சலி செய்யவேண்டாவா?

தான் பெற்ற இன்பம், இவ்வையகமும் பெறக் குரலெழுப்பிய சான்றோரின் வழிமேல் விழி வைத்து, வியர்வைக்குத் தயங்காமல், உழைப்பிற்கு அஞ்சாமல், விரைந்து செல்வதன்றோ நேருவிற்கு நேர் அஞ்சலி? 'எல்லோரும் வாழ, நன்றாக வாழ, ஒன்றாக வாழ' எல்லோரும் உழைப்பதும், நன்றாக உழைப்பதும், ஒன்றாக உழைப்பதும் அன்றோ, அவருக்கு விருப்பமான காணிக்கை?

கண்ணீரோ, கண்டவர்க்கெல்லாம் கிடைக்கும் காணிக்கை. நேருவுக்கும் இதுதானா? இப்போது சொல்லுங்கள்; எது அவருக்கு?





# சுதந்திரம் காப்போம்

## 2

அகில இந்திய ரேடியோவின் திருச்சி நிலைய இயக்குனர் அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே!

இன்று நாம் பதினான்காவது சுதந்திர தின விழாவின் கொண்டாட்டத்திற்காகக் கூடியிருக்கிறோம். சுதந்திர தினம் எல்லோருக்கும் மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கக்கூடிய நாளாகும். இக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வது பற்றி நான் பெருமை அடைகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் பெருமையடைய காரணங்கள் பல உள்ளன.

"அக்கா வந்து கொடுத்த, சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே" என்று இக்காலத் தமிழ்க் கவிஞர் ஒருவர் அழகாகக் கேட்கிறார். உண்மைதானே! காசு பணம் கொடுத்து, மளிகைக் கடையிலே சுதந்திரத்தை வாங்க முடியுமா? அல்லது ஆயிரம், பதினாயிரம்கொடுத்தாவது, நகைக்கடையிலே பொன்னைப்போல, வைரத்

---

[திருச்சி வானொலி நிலையத்தார் 14—8—1960 அன்று ஏற்பாடு செய்த சுதந்திர தின விழா தொடக்க வுரை]

தைப்போல விலைக்கு வாங்க முடியுமா? சுதந்திரம் மனிதனுடைய மூச்சு; பிறப்புரிமை. ஆகவே விலை மதிப்பு இல்லாதது.

இத்தகைய சுதந்திரத்தை நெடுங்காலம் இழந்திருந்தோம்; மீண்டும் பெற்றோம். என்ன விலை கொடுத்து? எத்தனை தலைமுறை பாடுபட்டு? பிறநாடுகளின் வரலாறுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், சுதந்திரத்திற்காக நாம் கொடுத்த விலை அற்பம், நாம் உழைத்த காலமும் குறுகியது என்பது புலனாகும். பிற நாடுகள் பல தலைமுறை, எண்ணில் அடங்கா உயிர்களையும் அளவற்ற பொருள்களையும் தியாகம் செய்து பெற்ற உரிமையை இந்தியா இரண்டொரு தலைமுறைகளில், நம்ப முடியாத மிகக் குறைந்த ஆள் சேதத்தோடும் பொருள் சேதத்தோடும் பெற்றிருக்கிறது. இது பெருமைக்கு உரியது அல்லவா? இவ்வளவு எளிதில்பெற எது உதவி செய்தது? காந்திவழி உதவியது. உலகம் அது வரையிலும் கண்டிராத புதுவழியை, அறப்போர் வழியை, மகாத்மாகாந்தி அடிகளார், அண்ணல் காந்தி அடிகளார் ஆக்கித்தந்தார். அவர் வழியில் எல்லோரும் இல்லாவிட்டாலும், பலர் ஒன்றுபட்டு நின்றதால், அந்தக்கட்டுக் கோப்பு நமக்கு விரைவில் பலன் கொடுத்தது.

பெற்ற சுதந்திரமும் அந்நிய மன்னர் கையிலிருந்து இந்திய மன்னர்கள் கைக்கு மாறி இருந்தால் மன்னர்கள் பூரிக்கவும், மற்றவர்களாகிய நாம், சூழ்நிலையால் சிரிக்கவும் இருக்கும். ஆனால் சுதந்திரப்போரின் விளைவு என்ன? வெறும் தன்னாட்சியா? இந்திய மன்னர்களாட்சியா? இல்லை. எடுத்த எடுப்பிலேயே தன்னாட்சி

குடியாட்சியாக மலர்ந்துவிட்டது. நாட்டு ஆட்சி, மீண்டும் முற்கால 56 மன்னர்களுக்கோ, ஆங்கில ஆட்சி காலத்து 523 மன்னர்களின் கைக்கோ மாறியிருந்தால் அவர்களும் அவர்களைச் சேர்ந்த ஒரு சிலரும் கொண்டாட நாம் எல்லோரும் வேடிக்கைப்பார்க்க மட்டும் உரிமை உள்ளவர்களாக இருப்போம். ஆனால் எங்கும் நடந்திராத முறையிலே, இந்தியாவிலே பெற்ற உரிமை மக்களாட்சியாகவே எடுத்த எடுப்பிலேயே மலர்ந்து விட்டது.

அந்த உரிமையைப் பெறுவதற்கு நாட்டிலுள்ள அத்தனை பேரும் நினைக்கவோ உழைக்கவோ தியாகம் செய்யவோ இல்லை என்பது உண்மை. சிலர் நினைத்தார்கள், அதிலும் சிலர் உழைத்தார்கள், அதிலும் சிலர் தியாகம் செய்தார்கள், என்பதற்காக நாம், அது, யாருக்கோ வந்த விருந்தென்று இருக்க முடியுமா? உழைத்தவர்கள் யாராக இருந்தாலும் பலன் நம் அனைவருக்கும் தானே. இன்று, நம்மிலே பலர், இந்நாடு முழுவதும், பிற நாடுகளிலும் பேரும், புகழும் பெற்று விளங்குவதைக் காண்கிறோம். அடிக்கடி, உலக சபைகளில் இந்தியத் தலைவர்களும் மேதைகளும் தலை நிமிர்ந்து நின்று, வழிகாட்டுவதைப் பார்க்கிறோம்.

இவ்வளவு உயர்வும் சிறப்பும், அவரவர்களுடைய தனிச் சிறப்பாலும் திறமையாலும் வந்தன, என்று எண்ணுகிறீர்களா? அப்படியானால் நீங்கள் மீண்டும் சிந்திக்க வேண்டும். எத்தனை இயற்கை ஆற்றல்கள் இருந்தாலும், அடிமை நாட்டில் வாழும் மனிதன், குடத்தில் இட்ட விளக்காவான். உரிமை பெற்ற நாட்டிலுள்ள

அறிவாளி, குன்றின்மேல் இட்ட ஒளியாவான். சுதந்திரம் பெற்ற பிறகே, நம்மிலே பலர் பல பெரும் நிலைகளுக்குவர முடிந்தது. வந்தபின் பயன்பட முடிந்தது

வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் உயிர்நாடியாகிய சுதந்திரத்தைப் பெற, நாம் அன்று ஒன்றும் செய்யவில்லையே, என்பதற்காக வெட்கப்பட்டு அதனால் பொருமையையோ, கசப்பையோ வளர்த்துக் கொண்டு சுதந்திரத்தை அலட்சியமாக நினைப்பது சரியா? முன்னோர் சேர்த்து வைத்த சொத்து என்பதற்காக அதைப்பற்றிக் கவனக்குறைவாக இருக்கிற பிள்ளையை, ஊரார் என்ன சொல்வார்கள்? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்தால்; நம்முடைய முன்னோர்களிலே சிலர், அரும்பாடுபட்டுப் பெற்ற இந்தச் சுதந்திரத்தைப் பற்றி நாம் கவனக் குறைவாக இருப்பதற்கில்லை என்பது புலனாகும். அன்று உழைக்காததால், இன்று அதிகக் கவனத்தோடும் அதிகக் கடமை உணர்ச்சியோடும் நாட்டுக்கு உழைக்கவேண்டும் என்ற தெளிவும் ஏற்படவேண்டும்.

சுதந்திரம் பெற்ற நாட்டுக்கு உழைப்பு தேவையா? இந்தக் கேள்வி உங்கள் மனத்திலும் தோன்றும். சுதந்திரம் என்றென்றும் காக்கப்படவேண்டும். எல்லோருக்கும் அனுபவமாக வேண்டும். எல்லோருக்கும் நல்வாழ்வு கொடுக்க வேண்டும். உரிமையைக் காக்கவும், அது பயன்படவும் அதைப் பயன்படுத்தவும் விழிப்பு, என்றென்றும் விழிப்பு, உழைப்பு, சலியா நல் உழைப்பு, பெரும் உழைப்பு தேவை. குடியாட்சியாகிய பிறகு யாருக்கும் பிறப்பால் தனி உரிமை இல்லை. எந்த

மூலையில் பிறந்திருந்தாலும், எந்நிறத்தில் பிறந்திருந்தாலும், அறிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும் தேடிக்கொண்டு, அவற்றைத் தனக்குப் பயன்படுத்தாமல், தன் சிறு குழுவிற்கே மடக்கி விடாமல், பரந்த நாடு முழுமைக்கும் பயன்படுத்துகிற யாரும், எந்த நிலைக்கும் வளரலாம், வரலாம் என்பது குடியாட்சியின் அடிப்படை. அந்த அடிப்படை ஏட்டிலா, நாட்டிலா! சென்ற 13 ஆண்டு கால நிகழ்ச்சிகள் நாட்டிலே, நடைமுறையிலே அது இருப்பதைக் காட்டவில்லையா? இன்று, யார், எந்தப் பொதுப் பதவியை தங்கள் பிறப்பு காரணமாக, மரபின் உரிமை பற்றி, வகித்து வருகிறார்கள்? இதை உணர்ந்த நாம், எதிர் காலத்தில், பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர் எல்லாம், விழி பெற்று பதவி கொள்வதற்கான ஆக்க வேலைகள் பலவற்றிலும் ஈடுபட விழிப்படைய வேண்டும்; உறுதி பெற வேண்டும்; தொடர்ந்து உழைக்க வேண்டும்.

சுதந்திரம் பெறுவதே அரிது. அது எளிதாக முடிந்துவிட்டதால் அதைக் காப்பதும், எளிதாக இருக்குமென்று, யாரும் நினைத்தலாகாது. உரிமை பெறுவதைவிட அதைக் காப்பதுதான் அரிது. மன்னர்களாகிவிட்ட நமக்கு, 'காட்டு ராஜா நினைப்பு' இந்தக் காலத்துக்கு ஒத்து வராது. இன்று தேவைப்படுவது, யார் பெரியவர்கள், யாரால், யாரை வெல்ல முடியும், மடக்க முடியும் என்கிற தனிப்போட்டி நினைப்பு அல்ல. குழுப்போட்டி நினைப்பும் அல்ல. இளம் பருவத்திலே இருக்கிற குடி ஆட்சிக்குத் துணை, எது நாட்டுக்கு நல்லது, எது எல்லோருக்கும் நல்லது, என்ற சிந்தனையும், அதற்காக நாம்

எதைத் தியாகம் செய்யலாம், எத்தகைய தியாகம் செய்யலாம் என்ற துடிப்பும்.

உரிமைப் போருக்காக அன்று ஒன்றும் செய்யாத என்னைப் போன்றவர்கள், இன்றும் நாளையும் அந்தக் குறையை ஈடு செய்ய வேண்டாவா? என்னைப் போன்றவர்கள் தானே நம்மிலே பலர். ஆகவே, இந்த நன்நாளிலே, பெறுதற்கு அரிய நாளிலே, நாம் ஒவ்வொருவரும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதி, 'இந்த நாட்டு நலத்திற்காக என்றும் விழிப்போடும் தியாகத்தோடும் பாடுபடுவேன், தன்னை மறந்து பாடுபடுவேன், பற்பல வேற்றுமைகளை மறந்து பாடுபடுவேன், நாட்டிலுள்ள எல்லார் நலன்களையும் குறித்துப் பாடுபடுவேன்' என்பதாகும்.

வாழ்க்கை உள்ள வரையிலே, சிக்கல்கள் எழும். ஒன்று போனால் மற்றொன்று முளைக்கும். அப்படியே கருத்து மோதல்கள் ஏற்படும். ஆளுக்கு ஆள் கருத்து மோதல் மட்டுமல்ல. நமக்கு நாமே மோதிக்கொள்ளவில்லையா? பாலனாக இருந்தபொழுது நினைத்த நினைப்பே, வாலிபப் பருவத்திலும் வருமா? வாலிபப் பருவத்திலே நினைத்த நினைப்பு, வெட்கப்படக்கூடியதாகவோ, அல்லது மறுக்கப்பட வேண்டியதாகவோ, முதுமைப் பருவத்தில் தோன்றுவது இல்லையா? இப்படித் தனக்குள்ளேயே எண்ண மாறுதல் ஏற்படுவதால், தன்னைத் தானே வெறுத்துக் கொள்வதோ குறைத்துக் கொள்வதோ, உடைத்துக் கொள்வதோ சரி என்று சொல்ல முடியுமா? தனி மனிதனுக்கே இப்படித் தனக்குள்ளே கருத்து மாறுதல் ஏற்படுகிற போது, கோடிக் கணக்கான மக்கள் உள்ள

நாட்டிலே, என்றும், எல்லோரும், ஒரே மாதிரி நினைப் பிலே இருக்க முடியுமா? ஆளுக்காள் கருத்து வேற்று மையோ, கொள்கை வேற்றுமையோ, கூட்டத்திற்குக் கூட்டம் கொள்கை வேற்றுமையோ இருப்பது இயல்பு. ஆதலால், ஒருசில, வெவ்வேறு இயக்கங்கள் இருப்பதும் அஞ்சுவதற்கானதும் அல்ல, வியப்பதற்கானதுமல்ல, வெறுப்பதற்கானதுமல்ல.

ஆனால் வெவ்வேறு கொள்கைகளையும் முறைகளை யும் கொண்டு இயங்கும் இயக்கங்கள் அனைத்தும், பொது அடிப்படையாகிய நாட்டுப் பாதுகாப் பிலும், நாட்டு முன்னேற்றத்திலும், ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். வேகத்தைப் பற்றியும், முறை யைப் பற்றியும் போடுகிற சண்டைகள் அடிப்படைக் குத் தீங்கு ஏற்படுத்தும்படி விடக் கூடாது, என்கிற உண்மையை, பெரியவர்கள் உணர்ந்தாலும் உணரா விட்டாலும், பொதுமக்கள் பெருவாரியாக உணர்வது நல்லது. இதுவே குடியாட்சி மாளிகையின் அடிப்படை, என்றும் உறுதியாக இருப்பதற்கு வழி ஆகும். உங்களைப் போன்றே சுதந்திரம் பெற்றதில் பங்குகொள்ளாமல், வேடிக்கை மட்டும் பார்த்த ஒருவனாகிய நான், நினைவு படுத்த விரும்புவது, பெற்ற சுதந்திரம் பாடுபட்டவர் களுக்கு மட்டும் அல்ல, நமக்கும். ஆகவே நாமும் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம், அனுபவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம், நாட்டிலுள்ள எல்லோரும் அனுபவிக்கவிடக் கடமைப்பட்டிருக் கிறோம் என்பதை உணர்ந்து நாட்டின் பாதுகாப்பும், வளர்ச்சியும் நம் ஒவ்வொருவர் கையிலும் இருக்கிறது

என்ற தெளிவோடு, பல்லாண்டு பாடுபட வேண்டு மென்று வேண்டிக்கொண்டு இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தொடங்கி வைக்கிறேன்.






3

சீன ஆக்கிரமிப்பு. இச்செய்தியைக் கேட்டேன். எங்கு? இங்கிலாந்தில் கேட்டேன். நான் மட்டுமா? இல்லை; அந்நாட்டவரும் கேட்டனர். அவர்களிடம் எழுந்த எண்ண அலைகள் என்ன? இந்தியாவிற்கு உதவவேண்டும். பெரும் அளவில் உதவவேண்டும். விரைந்து உதவவேண்டும். பலவகையிலும் உதவ வேண்டும். இவையே அவர்களது எண்ண அலைகள். சிலர் உள்ளத்தில் மட்டும் மோதிய அலைகளா? இல்லை. எல்லோர் உள்ளத்திலும் எழுந்த அலைகள். இவையே அவர்களின் ஒருமித்த கருத்து. எப்போது? செய்தியைக் கேட்டதும். பிறர் தூண்டி எழுந்தவையா? இல்லை. தாமே எழுந்தவை. கேட்டதும் எழுந்தவை. தலைவர்களின் கருத்தறியக் காத்திருக்கவில்லை அவர்கள். மக்கள் அனைவரும் உடனுக்குடன் இக்கருத்துகளைத் தெரிவித்தனர். பின்னர் தலைவர்களும் அதே கருத்தினை வெளியிட்டனர். விளைவு? ஆங்கில அரசின்

[சென்னை வானொலி நிலையத்தில் 10—1—1963-இல் ஆற்றிய உரை]

பேருதவி. சீனரைத் திகைத்து நிற்கவைக்கும் அள விற்கு விரிவான உதவி.

நொடிப் பொழுதில், தானே எழுந்த உணர்ச்சி யினை நேரில் காணும் பேறு பெற்றேன். பரவசமடைந் தேன். இந்தியத் தாய்நாட்டை நினைத்தேன். ஆசிரியப் படையை நினைத்தேன். நாட்டுப் பாது காப்பிற்கு என்னவெல்லாம் செய்கிருர்களோ என்று எண்ணினேன். செய்தி அவ்வளவு தூரம் எட்டவில்லை. ஏன்? நமக்குச் செய்யத்தானே தெரியும்; சொல்லவா தெரியும்?

ஆசிரியர்கள் இந்நெருக்கடியில் செய்த தியா கத்தை அறியாது, சென்னையில் வந்து இறங்கினேன். ஏராளமான ஆசிரியர்கள் பாதுகாப்பு நிதிக்கு ஒருநாள் ஊதியத்தை வழங்கியதைக் கேட்டு மகிழ்ந்தேன். யார் சொல்லக் கேட்டேன்? கனம் கல்வி அமைச்சர் அவர் களே பாராட்டிச் சொல்லக் கேட்டேன். 'மாணவ மாணவிகளும் சளைக்கவில்லை. மற்றவர்களோடு போட்டிபோட்டார்கள். பொன்னும் பொருளும் பெரு மளவில் திரட்டி அளித்தார்கள்'. இத் தகவலையும் அறிந்து பூரித்தேன்.

'உடலால் நாற்பது கோடி; உள்ளத்தால் ஒருவரே. ஆகவே எவரும் கள்ளத்தால் நெருங்கொணுதே' என் கிற நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளதை உணர்ந்தேன்.

ஊதியத்தைத் துறந்து, தியாகப்படை என்பதை மீண்டும் மெய்ப்பித்த ஆசிரியப் பெருமக்களுக்கு என் நன்றி, பாராட்டு, வணக்கம்.

'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பதை மெய்ப்பிக்கிறார்கள், மாணவ மாணவிகள். பலவகையாலும் உதவும் அவர்களுக்கு என் வாழ்த்துகள். ஒப்பில்லாத பாரத சமுதாயத்தை அமைப்போம் வாரீர், தம்பிகளே! தங்கைகளே!

'மக்கள் சக்தி மாபெரும் சக்தி!' அச்சக்தி ஒன்று திரண்டு ஒருமுகமாகக் கிளம்பியுள்ளது. அதை வளர்ப்போம். பாதுகாப்புப் பணிகளைச் சீராக்கிப் பெருக்குவோம்.

இருபால் ஆசிரியத் தோழர்களே!

'மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தில் மாண்பினை' இழக்கலாமோ? நம்முடைய தேவைகள் பல. ஆனால் நாட்டிற்காக நல்லுயிரையும் பணயம் வைத்துப் போராடும் வீரர் தம் தேவைகளும் பல. அவை உடனடியானவையும் அல்லவா? தள்ளிப்போட முடியாதவையும் அல்லவா? அவற்றை விரைந்து நிறைவேற்ற வேண்டாவா? அதற்காகத் தொடர்ந்து தியாகம் செய்ய வேண்டாவா? நெருக்கடி தீருமட்டும் திங்கள் தோறும் ஒரு நாள் ஊதியமாகிலும் பாதுகாப்பு நிதிக்கு உதவ வேண்டாவா? ஏன்? அவர்கள் வீழ்ந்தால் நமக்கு வாழ்வு ஏது? அவர்கள் வெற்றியே நமது வாழ்வு. இச்சிறு தியாகத்தைக்கூடச் செய்யாமல் சுதந்திரத்தைக் காப்பதுதான் எப்படி? 'சுக்கா மிளகா சுதந்திரம்,' எவரோ கொடுக்க?

தோழர்களே! தொடர்ந்து உதவுங்கள். உதவச் செய்யுங்கள். எல்லோரையும் உதவச் செய்யுங்கள்.

தனியார் செலவைக் குறையுங்கள். விழாச்

செலவைக் குறையுங்கள். மாலைபோடும் செயலை அடியோடு நிறுத்துங்கள். நாட்டுச் செலவிற்கு, பாது காப்புச் செலவிற்கு உதவுங்கள்.


பொன்னும் பொருளும் போதுமா? வெள்ளம்போல் வீரர் கூட்டம் வேண்டுமே! போர்முனைக்கும் வேண்டும்; ஏர்முனைக்கும் வேண்டும்; உற்பத்திக்கும் வேண்டும்; அலுவல்களுக்கும் வேண்டும். இவ்விடங்களுக்கு விரைய வேண்டியவர்கள் அல்லவா, மாணவ மாணவிகள்? அவர்களை யெல்லாம் பள்ளிக்கூட இடங்களை நிரப்பவே வைத்துக்கொள்வதா? நெடுங்காலம் நிறுத்தி வைத்துக் கொள்வதா? மடமடவென்று தேற்றி, விரைவில் வெளி யேறச் செய்யவேண்டாவா? இதுவும் நாட்டுப் பாது காப்புத் தொண்டல்லவா? ஆகவே, நிற்காமல் ஆண்டு தோறும் ஒரு வகுப்புத் தேற உதவுங்கள். தள்ளிவிடச் சொல்வதாக எண்ணாதீர்கள். தனிக்கவனத்தால், கூடு தல் படிப்பால் தேர்ச்சித் தகுதியாளர்களாக்குங் கள். விரைவில் பொறுப்பேற்க அனுப்புங்கள்.


எதையும் வீணாக்காதீர்கள். உங்கள் காலம் மட்டுமல்ல—படிப்போர் காலமும் வீணாகவேண்டா. உண்ணும் பொருளும் வீணாகவேண்டா. உடுக் கும் உடையும் வீணாகவேண்டா. நம்மைப்போல் உணவுப் பொருளை வீணாக்குவோர் மண்ணில் எவரும் இல்லை. இந்த டம்பாச்சாரிப் பழக்கம் இனியும் வேண்டா;

பள்ளித் தோட்டமெல்லாம் காய்த்துக் குலுங் கட்டும். உள்ளூர் உணவுத் தேவைக்கு உதவட்டும். தன்னிறைவை நெருங்கட்டும்.

விட்டுப் புழைக்கடைகளும் படரும் கொடிகளுக்கே, காய்க்கும் செடிகளுக்கே. இதையும் நினைவுபடுத்துங்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க எல்லோரையும் தூண்டுங்கள்.

அஞ்சாமை, தியாகம், உழைப்பு, மிகுந்த தேர்ச்சி, மிகுந்த உற்பத்தி, மிகுந்த சிக்கனம், மிகுந்த சேமிப்பு இவையே இப்போதைய தேவை. எங்கே உங்கள் பங்கு? எங்கே மாணவர் மாணவிகள் பங்கு? எங்கே பெற்றோர் பங்கு?





# நாட்டுப் பாதுகாப்பில் பள்ளிகளின் பங்கு

## 4

பள்ளிக்கூடம், நாட்டின் இதயம். அது எங்கோ அந்தரத்தில் வேலை செய்கிறதா? இல்லை. சமுதாயத்தில் இயங்குகிறது. சமுதாயத்தால் இயக்கப்படுகிறது. அப்படியானால் பள்ளிக்கூடம் யாருக்காக இயங்க வேண்டும்? சமுதாயத்திற்காக இயங்க வேண்டும். அதாவது, சமுதாயத்தின் குறிக்கோளுக்குத் துணை நிற்க வேண்டும். சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றவேண்டும். இன்றைய தேவைகளையும் நிறைவேற்றவேண்டும். மாறிவரும் எதிர்காலத் தேவைகளையும் நிறைவேற்ற ஆயத்தஞ் செய்யவேண்டும். இதை நினைவில் கொண்டு, பள்ளிக்கூடங்கள் செய்யவேண்டிய பாதுகாப்பு வேலைகளைப்பற்றிச் சிந்திப்போம்.

சென்ற அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் இந்தியாவைத் திடீரெனத் தாக்கிற்று சீனா. சில வாரங்களில் வடஎல்லைப் பகுதிகளில் இந்திய மண்ணை ஆக்கிரமித்தது. அதன் விளைவாக, நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளும்

[சென்னை வானொலி நிலையத்தில் 17—1—1963-இல் பேசிய பேச்சு]

முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டிய நெருக்கடி நேர்ந்துள்ளது. ஆகவே நாடு முழுவதும் வீராவேசத்துடன் பொங்கி எழுந்துள்ளது. இந்திய மண்ணை எவரும் கவரவிடமாட்டோம் என்று சூளுரைத்து நிற்கிறது ஒரு முகமாக. நீறு பூத்த நெருப்புபோல் இருந்த நாட்டுப்பற்று, சீன ஆக்கிரமிப்பின் காரணமாக எல்லோர் உள்ளங்களிலும் கொழுந்துவிட்டு எரிகிறது. வரலாறு காணாத அளவில், நாட்டுப்பற்றும், ஒருமைப்பாட்டு உணர்ச்சியும் பெருக்கெடுக்கக் காண்கிறோம். பெரியவர்களிடம் மட்டுமல்ல சிறுவர்களிடமும் காண்கிறோம். மாணவ மாணவிகளெல்லாம் வீறுகொண்டு எழுந்துள்ளனர். தற்காப்பைப் பலப்படுத்த முயலும் நம் பாரத நாட்டிற்குத் துணை நிற்பது பள்ளிகளின் பொறுப்பு.

இன்றைய விழிப்புணர்ச்சியை மங்காது காத்துக் கொள்ளவேண்டும். நாட்டுப்பற்றை மேலும் போற்றி வளர்க்க வேண்டும். ஒற்றுமை உணர்ச்சியைத் தொடர்ந்து வளர்க்கவேண்டும். இவையே கல்விக் கூடங்களின் கடமைகளாகும்.

நாட்டின் பாதுகாப்பிற்காக அஞ்சா நெஞ்சப் படைத்த போர் வீரர்கள் தேவையே; தியாகிகள் தேவையே; அவர்களுக்குப் பக்கபலமாக ஒன்றுபட்டு நிற்கும் கோடானுகோடி நன்மக்களும் தேவையே. அத்தகைய நாட்டுப்பற்றுடைய நன்மக்களை, ஒற்றுமையுணர்ச்சி கொண்ட பெருமக்களை, உருவாக்கவேண்டிய பொறுப்பு, பள்ளிக்கூடங்களையே சார்ந்ததாகும்.

நாட்டைப் பாதுகாக்க நாட்டுப்பற்றும் ஒற்றுமை யுணர்ச்சியும் மட்டுமே போதுமா? எதையும் தாக்குப் பிடிக்கும் திறனும் உடல்வலிவும் இருந்தால் அல்லவா அவர்கள் முழுத்தொண்டாற்ற முடியும்? உடல் வலி வுள்ள மக்களைப் பெறுவது எவ்வாறு? நினைத்தவுடன் பெறமுடியுமா? அவர்களை நாமே உருவாக்கவேண்டும். எப்படி உருவாக்குவது? தக்க பயிற்சியால். பல்லாண்டு தொடர்ந்து பயிற்சி கொடுத்து உருவாக்கவேண்டும். எனவே, உடற்பயிற்சியில் கூடுதலான கவனஞ் செலுத்த வேண்டும். மாணவ மாணவிகளெல்லாம் போதிய உடற்பயிற்சி பெற்று உடல் வலிமை மிக்கவர்களாக வளரவேண்டும். நம் பையன்களும் பெண்களும் எப்படி யிருக்க விரும்ப வேண்டும்? எலும்புந்தோலுமாய்க் குச்சிபோலிருக்கவா? அசைந்தாடும் மலர்க்கொடியாக இருக்கவா? இவையெல்லாம் கற்பனைக்கு வேண்டு மானால் சரி. ஆனால் வாழ்க்கைக்கோ? பாரதியார் வேண்டியதுபோல 'அரிவாளைக்கொண்டு பிளந்தாலும் கட்டுமாறு உடல் உறுதி' வேண்டும். திரு. வி. க. கூறியதுபோல எஃகு நரம்பும், எக்கழுத்தும், தடை படாக்குருதி ஓட்டமும் உடையவர்களாகத் திகழ்தல் வேண்டும். ஆண்கள் மட்டுமா இவ்வாறு திகழ வேண்டும்? இல்லை, இல்லை. பெண்களும் இவ்வாறே இருக்க வேண்டும். உடல் வன்மை போர் வீரர்களுக்கும் ஊர் வீரர்களுக்கும் மட்டுமா? அலுவலர்களுக்கும் தேவை. தொழில் செய்வோருக்கும் தேவை.

எல்லோருக்கும் இன்றியமையாத உடல் வலிமையை எப்போது பெறுவது? இளமையில்தானே பெறமுடியும்.

நடுமையிலும் முதுமையிலும் பெற இயலுமா? இளமை யில் பெறப் போதிய உடற்பயிற்சி தேவை. அதற்கு வழிவகைகள் செய்வது எல்லாக் கல்விக்கூடங்களின் உடனடியான கடமையாகும்.

உடற்பயிற்சியால் பலன் பெற மற்றொன்றும் தேவை. அது எது? உணவு; போதிய உணவு சத்துள்ள சீர் உணவு. அது இன்றைய நிலையில் பலருக்கு வீட்டில் கிடைப்பதில்லை. வீட்டில் கிடைக்கா படிப்பை, பள்ளியில் கொடுக்கவில்லையா? அதுபோல வீட்டில் கிடைக்காத உணவைப் பள்ளிகள் கொடுக்க வேண்டுமல்லவா? இப்போது 27,000 தொடக்கப் பள்ளிகளில் 13,10,000 சிறுவர் சிறுமிகளுக்கு நடுப் பகல் உணவு கிடைக்கிறது. இத்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். சத்துள்ள காய் கறிகள் கீரை வகைகள் ஆகியவற்றை நிறைய சேர்க்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகளுக்கு கட்டான உடல் வாய்க்கும்.

பசி, இடம் பார்த்தா வரும்? பருவம் பார்த்த வரும்? தொடக்கப்பள்ளிப் பிள்ளைகளோடு நிற்குமா எல்லோரையும், எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களி லும் வாட்டி வதைக்குமல்லவா? பசி வந்திடப் பத்தும் பறந்து போமல்லவா? உயர் நிலைப்பள்ளி மாணவ மாணவி கள் இதற்கு விலக்கா? அவர்களில் பலர் ஏழைகள். அவர் களுக்கும் வீட்டிலோ போதிய உணவு கிடைப்பதில்லை அக்குறையைத் தீர்ப்பது எப்படி? நடுப்பகல் உணவு திட்டம் ஒன்றே வழி. தற்பொழுது 636 உயர் நிலை பள்ளிகளில் 18,000 மாணவ மாணவிகளுக்கு இலவ

உணவளிக்கப்படுகிறது. அப்பள்ளிகளில் உள்ள எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் உணவளிக்கும் வகையில் இதை விரிவுபடுத்தவேண்டும். மேலும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் பகல் உணவுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவும் வேண்டும். போதிய சத்துள்ள உணவைக்கொடுத்து, உடற்பயிற்சி செய்யவைத்தால், நம் பையன்களும் பெண்களும் நல்லிளங் காளைகளாக வாட்டசாட்டமாக வளராமலா போவார்கள்? நாட்டுப் பற்று, ஒற்றுமை உணர்ச்சி, உடல் வலிமை ஆகிய வற்றை வளர்த்தபின் செய்யவேண்டியதென்ன?

உயர்நிலைப்பள்ளி மாணவர்களையெல்லாம் 'தேசிய மாணவப்படை' (N. C. C.) யில் சேர்க்கவேண்டும். அடுத்த ஆண்டில் இப்படை பெருமளவில் விரிவாக்கப்படலாம். எல்லாப் பள்ளிகளிலும் N. C. C. ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே எல்லோரும் அதில் சேர்ந்து ஒழுங்கு, கட்டுப்பாடு, தாக்குப்பிடிக்கும் ஆற்றல் ஆகிய பண்புகள் அமைய இப்போதிருந்தே தயாரித்தஞ் செய்யுங்கள்.

உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் பெண்களைத் தையல் வேலையிலும் பின்னல் வேலையிலும் வல்லவர்களாக்க முயலுங்கள். வெண்பனி மூடிய இமயத்தின் கடுங்குளிரில் நாடு காக்கக் கடும்போர் புரியும் ஜவான்களுக்குக் கதகதப்பான ஆடைகள் தேவை, அவர்களுக்குக் கம்பளிச்சட்டையும், கையுறையும் காலுறையும் குல்லாவும் வேண்டும். பெண்பள்ளிகள் இவற்றைத் தயாரிப்பதில் அதிகம் ஈடுபடும்படி வேண்டுகிறேன். பிற

பள்ளிகளில் உள்ள பெண்களும் இவ்வுதவி செய்ய
தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் 'முதல் உதவி', 'நர்சிங்' ஆகியவற்றி
பயிற்சிபெறவும் முந்தவேண்டும்.

இவற்ருேடு நின்றதா பள்ளிக்கூடத்தின் பணி
உயிரைக் கொடுத்து நாட்டைக் காக்கத் துணிந்துள்
போர் வீரர்களுக்கு ஆதரவாக, காசு பணத்தை
தாராளமாக வழங்கவேண்டும். அடுத்து அடுத்
வழங்கவேண்டும். எவ்வளவு போதும் என்று கேட்க
மல், எவ்வளவு முடியுமோ அவ்வளவும் வழங்கவேண்டு

இவ்வகையில் பள்ளிகள், இதுவரை செய்துள்ள
பெரிது. இனியும் அப்படியே செய்யும் என்ப
திண்ணம்.

உடற்பயிற்சியைப் பெருக்குவதில், புதுப்பயிற்
களை மேற்கொள்வதில் ஈடுபட்டுக் கல்வித் தேர்ச்சியை
குறையவிடலாமா? ஆகாது. ஆகாது. எல்லாப் பள்
களும், எக்குறையையும் பொருட்படுத்தாது, அரும்பா
பட்டு, எல்லோரும் எல்லா வகுப்புகளிலும் தவருது தேறு
நிலையை அடைய முயலவேண்டும். மாணவ மாண
களின் ஆர்வத்தை இம்முயற்சியில் ஒருமுகப்படுத்
வேண்டும்.

இக்காலம் விஞ்ஞான காலம். வரும் காலமு
விஞ்ஞான காலமே. ஆகவே விஞ்ஞானத் தேர்ச்சி மிகு
யாக வேண்டும். விஞ்ஞானப் பாடத்தில் அதிக கவன
செலுத்தவேண்டும். விஞ்ஞானப் பாடம் சும்மா பார்த்து
படிக்கும் பாடமா? அல்லவே அல்ல. அது செய்
காட்டிக் கற்பிக்க வேண்டிய பாடம். அது மட்டுமா


செய்யவைத்துக் கற்கவைக்கும் பாடம். எதைச் செய்து காட்டுவது? எதைச் செய்யவைப்பது? ஆசிரியர்கள் சோதனைகளைச் செய்து காட்டுவது, மாணவர்களைச் சோதனைகள் செய்யவைப்பது. இவையிரண்டும் இல்லாத விஞ்ஞானப்படிப்பு வீணான படிப்பு. ஆகவே, பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானச் சோதனைகளைச் செய்து காட்டுவதிலும் மாணவர்களைச் செய்ய வைப்பதிலும் பெருமளவு கவனஞ் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனும் மாணவியும் சில சோதனைகளையாவது செய்து பார்க்க வாய்ப்பும் வசதியும் செய்யவேண்டும்.


நல்லது. இது எல்லோரும் ஒப்புக்கொண்ட கொள்கையே. சோதனைகள் செய்ய, விஞ்ஞானக்கருவிகள் வேண்டுமே. இன்று, பல பள்ளிகளில் அவைகள் இல்லையே. உண்மை. இப்படியே இருக்கலாமா? ஆகாது. அத்தனைக் கருவிகளையும் சந்தையிலே விலை கொடுத்து வாங்கவா? அதற்குப் பணம் கிடைத்தாலும், கருவிகள் கிடைக்க எத்தனைக் காலம் ஆகும்? நெடுங் காலம் ஆகுமே. அதுவரையில் விஞ்ஞானப்படிப்பு பாழாகலாமா?

உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ஆன விஞ்ஞானத் துணைக்கருவிகள் பலவற்றை, எளிதாகக் கிடைக்கும் பல பழைய பொருள்களைக் கொண்டே, அமைத்துவிடலாம். தமிழ்நாட்டில் நடக்கும் ஒவ்வொரு விஞ்ஞானப் பொருட்காட்சியிலும் இத்தகைய 'கைச்சரக்கை'ப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். இனியும் 'கடைச்சரக்கு' கிடைக்கும் வரையில் காலத்தை வீணாக்கலாமா? கூடியவரையில் துணைக்கருவிகளைச்

கைச்சரக்காகவே பள்ளிகளில் செய்துகொண்டால், இன்றியமையாத சில நுட்பக்கருவிகளை மட்டும், உள் நாட்டுச் சந்தையிலோ வெளிநாட்டுச் சந்தையிலோ பெற்றுக்கொள்ளலாம். பள்ளிகளின் கவனம் கடைச் சரக்குகளைவிட்டு, கைச்சரக்குகளின் பக்கம் திரும்பு வதாக. விஞ்ஞானப் பாடம் கேள்விப் பாடமாக நிற்காமல் செய்முறைப் பாடமாக மலர்வதாக. அவ்விஞ்ஞான அறிவு, நம் வீட்டு வாழ்க்கையையும் நாட்டு வாழ்க்கை யையும் பாதுகாப்பையும் பலப்படுத்துவதாக.

கொழுந்துவிட்டெரியும் நாட்டுப் பற்று, தகர்க்க முடியாத ஒற்றுமையுணர்ச்சி, வலிமைகொண்ட தோள் கள் ஆகியவற்றைப் பெருக்குவது பள்ளிகளின் பொறுப்பு. தவிர, பயிற்சி பெற்ற துணைப்படை வீரர்கள், தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள், வளரும் விஞ் ஞானத்தோடு விளையாடக்கூடிய விஞ்ஞானிகள் ஆகி யோரைப் பெருக்குவதும் பள்ளிகளின் பெரும் பொறுப் பல்லவா? நாட்டுப் பாதுகாப்பிற்காகப் பள்ளிகள் இப் பணிகளில் தனிக் கவனஞ் செலுத்த வேண்டாவா? இம் முறையில் தம் பங்கைச் செலுத்த முந்துகின்றன பள்ளி கள். அப்படித்தானே? வளர்க உங்கள் முயற்சி, வெல்க பாரதம்.





# நாட்டுப் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பங்கு

## 5

ஒரு நாட்டின் இதயம் பள்ளிக்கூடம். சரி, நாட்டின் உயிர்நாடி யார்? இதயமாகிய பள்ளிகளை இயக்குபவர் கள்தானே. எனவே ஆசிரியர்களே உயிர்நாடி என் பதைக் கூறவும் வேண்டுமா? அவர்கள் நிலையே நாட்டின் நிலை. அவர்களிடம் நாட்டுப்பற்று மிகுந்திருந்தால் நாட்டு மக்களிடம் நாட்டுப்பற்று மிகுந்து இருக்கும். அவர்களிடம் தியாக உணர்ச்சி நிறைந்து இருந்தால் நாடு முழுவதும் தியாக உணர்ச்சி பரவியிருக்கும். ஆசிரியர்கள் வெறும் உபதேசிகள் மட்டும் அல்லர்; சிறந்த வழிகாட்டிகள். ஆகவே, சாதாரண காலத்திலும் சரி, நெருக்கடி காலத்திலும் சரி, நாட்டை உருவாக்கும் பெரும்பொறுப்பு ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் சேர்ந்ததாகும். நாட்டிற்குப் பல வகைகளில் உதவும் பொறுப்பும் அவர்களுடையதே.

இப்போது நம்நாட்டில் நெருக்கடி ஒன்று ஏற்பட் டிருக்கிறது. சென்ற அக்டோபர் 20-ஆம் நாள் நம் நாட்டின் வடஎல்லையில் போர் தொடுத்தது சீனு. வஞ்சக

---

[சென்னை வானொலி நிலையத்தில் 24—1—1963-இல் அன்று பேசியது]

மாகத் தொடங்கப்பட்டது இப்போர். இப்போது சி. வாரங்களாகச் 'சுடுதல்' ஓய்ந்திருக்கிறது. ஆயினு நெருக்கடி தீர்ந்துவிட்டதா? இல்லவே இல்லை. "'சுடுதல்' நின்றிருப்பதைக் கண்டு ஏமாந்து விட கூடாது. அயர்ந்து விடக்கூடாது. பாதுகாப்பு முயற்ச் களையும் தளர்த்திவிடக்கூடாது. என்றும் எவரும் இந்தி மண்ணைக் கவர நினைக்கமுடியாத அளவிற்கு நம் பா காப்புப் பலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்" என நம் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதை சிந்தையில் இருத்துவது நல்லது.

இந்நெருக்கடியில் ஆசிரியர்கள் ஆசிரியைகள் இத் வரையில் செய்தது என்ன? இனிச் செய்யவேண்டிய என்ன? இவற்றைச் சிந்திப்போம்.

நெருக்கடி ஏற்பட்டதும், நொடிப்பொழுதி ஆசிரியர்கள் ஆதரவு கிடைத்தது. கல்லூரி ஆசிரிய கள் முதல் தொடக்க நிலை ஆசிரியர்கள் வரையி உள்ள யாவரும் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை அளி தனர். பிறர் தூண்டுதலின்றிக் கொடுத்தனர் தாமாகவே கொடுத்தனர். தயக்கமின்றிக் கொடு தனர். வெகு தாராளமாகக் கொடுத்தனர். இரண் மூன்று மாதங்களுக்குள்ளேயே 15 இலட்சம் ரூபா வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

முதல் ஆவேசத்தில் ஒரு தடவை கொடுத்து, பின் நிறுத்திவிட்டனரா? அதுதான் இல்லை. அடுத்தடுத்து கொடுத்து வருகின்றனர். மாதந்தோறும் ஒருநா ஊதியத்தைப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக கொடுப்பதாகப் பல ஆசிரியர் சங்கங்களின் சார்பில் தீ

மானங்கள் செய்யப்பட்டன. தீர்மானங்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு அதிக சம்பளமா என்ன? இல்லையே. ஆரம்ப ஆசிரியர் களின் நிலேயோ மேலும் மோசமானது. ஆயினும் அவர் களுடைய கூட்டணியின் மாநில மாநாட்டு முடிவு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? தற்போதைய நெருக்கடி தீருகின்ற வரைக்கும் தட்டுத் தடங்கலின்றித் தொடர்ந்து மாதத்திற்கு ஒருநாள் சம்பளத்தை நன் கொடையாக வழங்குவது என்பதே. மற்றவர்களும் அவ்வாறே உறுதி பூண்டுள்ளனர். ஆகவே தத்தம் சொந்தக் கஷ்டங்களையெல்லாம் எப்படியும் சமாளித்துக் கொண்டு, எல்லா ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தாய் நாட்டைப் பாதுகாக்க நிதியுதவி புரிவார்கள், தொடர்ந்து புரிவார்கள் என்பது திண்ணம்.

பணத்தியாகம் என்பது ஆசிரியர்களோடு மட்டும் நிற்கலாமா? எல்லோரிடையிலும் பரவவேண்டாவா? அதையும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் தூண்டவேண்டும். எழுத்தறிவிப்போர், இறைவனுக்கு ஒப்பாவர். அவர்கள் செல்வாக்கும் அங்கிங்கெனுதபடி எங்கும் பரவியுள்ளது. அச்செல்வாக்கைக் கொண்டல்லவா, நடுப்பகல் உணவுத் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் பரப்பினோம்? ஆசிரியர்களின் ஆலோசனையையும் தன்னூக்கத்தையும், தூண்டுதலையும் செல்வாக்கையும் அல்லவா பள்ளிச் சீரமைப்பிற்கு முதலாக்கினோம்? அவர்களால்தானே, இலட்சக்கணக்கான மாணவ மாணவிகளுக்குச் சீருடை கிடைத்துள்ளது.

அளவிடமுடியாத பெரும் செல்வாக்கு படைத்தவர்கள் தமிழ்நாட்டு ஆசிரியர்கள். அவர்கள், அச்செல்வாக்கை மற்றொரு நல்ல செயலுக்குத் திருப்பிவிட வேண்டும். பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக வழங்கும்படி பொதுமக்களை ஊக்குவிக்கவேண்டும். பணத்தை மட்டும் கொடுத்தால் போதுமா? ஒவ்வொரு குடும்பமும் தன் சக்திக்கு ஏற்ற அளவில் தங்கத்தைத் தரவேண்டும். ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பிரசாரத்தை மேற்கொண்டால், விரைவில் ஏராளமான தங்கம் எளிதாகக் குவிந்துவிடும். ஆகவே ஆசிரியத் தோழர்கள் மனம் உவந்து கொடுக்கட்டும், மனமகிழ்ச்சியோடு கொடுக்க வைக்கட்டும்.

பாதுகாப்பிற்குப் பணம் மட்டுமா தேவை? இன்னும் பல தேவை. வாலிபமும், வன்மையும் உடையவர்கள் இராணுவத்திலே சேரவேண்டும். அவை இல்லாதவர்கள் என்ன செய்வது? இதுதானே உங்கள் கேள்வி? அவை இரண்டும் உடையவர்களைப் பட்டாளத்தில் சேரத்தூண்டி ஊக்குவிக்கவேண்டும்.

போர் நெருக்கடியில் தேவையானது மற்றொன்று. அது எது? அதுவே இரத்த தானம். ஆசிரியர்களும், தம்மால் முடிந்த அளவு இரத்ததானம் செய்ய வேண்டும். பிறரையும் இரத்ததானம் செய்யுமாறு தூண்டவேண்டும். மேலும் செய்யவேண்டியது யாது?

தீமையிலும் நன்மை விளைவது உண்டு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சீன ஆக்கிரமிப்பால், நம் மக்களிடையே நாட்டுப் பற்றும் ஒற்றுமையுணர்ச்சியும் மேலோங்கியுள்ளன. இவை நன்றாக வேரூன்ற

வேண்டும். அதற்கான தொண்டை ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே" என்று மாணவர்கள் மனதில் நன்றாகப் பதிய வைக்க வேண்டும். முற்கால இந்திய மன்னர்கள் அன்னியப் படையெடுப்புகளைத் தடுக்கக்கூட ஒன்று சேராததற்குக் காரணங்கள் அவர்களுக்குள் இருந்த சொந்தவிரோதம், புகழ், பதவிப்போட்டி ஆகியவை. அத்தவற்றை நாம் செய்யக்கூடாது என்னும் உணர்ச்சியை மாணவ மாணவிகளுக்கு ஊட்டவேண்டும். பிரிக்கமுடியாத ஒற்றுமையோடு கூடிய பாரதமே, சுதந்திரப் பாரதமாக, குடியாட்சிப் பாரதமாக, பண்பாட்டுப் பாரதமாக விளங்கும் என்பதை உணர்த்த வேண்டும்.

ஆசிரியர்களின் நாட்டுப்பணி பள்ளிக்கூட எல்லைக்குள் நின்று விடுவதா? இல்லை. பள்ளிக்கூடம் சமுதாயத்தின் மையம். நாட்டுப் பற்றும், ஒற்றுமையுணர்ச்சியும் தியாக சிந்தனையும் அம்மையத்திலிருந்தே ஊர் முழுவதும் பரவ வேண்டும். அவற்றைப் பரப்புவது ஆசிரியர்களின் தொண்டாகும். அதற்கேற்பப் பொது மக்களிடையே பிரசாரம் செய்யவேண்டும்.

'அதிக உழைப்பு; அதிக உற்பத்தி' இதுவே இன்றைய ஊக்கம் ஊட்டும் முழக்கம். தேவையான முழக்கமும்கூட. இதைக் கேட்டறிந்த பிறகு ஆசிரியர்கள் செய்ய வேண்டியதென்ன? எல்லோருக்கும் ஐந்து மணிப் பாடம் என்பதை மாற்றவேண்டும். மதிப்பெண்கள் குறைவாக வாங்கும் சில மாணவ மாணவிகளுக்குக் கூடுதலாக அரை மணியோ, முக்கால் மணியோ பாடம்

சொல்லிக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு கூடுதல் பாடத்திற்கு ஒவ்வொரு நாள் என்று திட்டமிட வேண்டும். குறைந்த மதிப்பெண்கள் வாங்குகிறவர்களுக்கு அத்திட்டப்படி முறையாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே ஆசிரியர் ஆசிரியைகளிடம் எதிர் பார்க்கும் அதிக உழைப்பு. இந்த அதிக உழைப்பின் பலனே? தேர்ச்சி அதிகமாவதே. இதற்காக எப்படியோ மேல் வகுப்பிற்குத் தள்ளிவிடலாமா? கூடவே கூடாது. தேறுவதற்கு வேண்டிய மதிப்பெண்கள் எல்லோரும் வாங்கும்படி செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலேயே இவ்வாண்டில் இது முடியுமா என்று மலைக்காதீர்கள். ஆண்டுப் பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. இதற்குள் எவ்வளவோ செய்ய முடியும்? திட்டமிட்டுக் கூடுதலாகக் கற்பிப்பதன் மூலம் அதிகம் பேரைத் தேறவைக்க முடியும். தேர்ச்சி உயர்வு இவ்வாண்டில் தொடங்கட்டும். மூன்றுண்டுகளில் முழுத்தேர்ச்சி நிலைக்கு உயரட்டும். இது தமிழ்நாட்டு ஆசிரியர்கள் ஆசிரியைகளால் முடியக்கூடிய காரியமே. உங்களில் எவருக்கும் அவநம்பிக்கை கொஞ்சமும் வேண்டா.

போர் முனைகளில் பணிபுரியும் வீரர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கத் தனிக்கவனம் தேவை. ஆசிரியர்களோ தமிழ் நாடெங்கும் சிற்றூர்தோறும் இருக்கிறார்கள். அவர்கள்தான் கவனம் முழுவதையும் செலுத்தி இதை நன்றாகச் செய்யமுடியும். இதற்கு, மதுரை மாவட்ட ஆசிரியர்கள் வழிகாட்டியுள்ளனர். வசதியும் ஓய்வும் உடைய ஆசிரியர்கள் பலர் முன்வந்து


போர் வீரர் குடும்ப நலக்குழுக்களை அமைத்துள்ளனர். போர்வீரர்களின் குடும்பங்களைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் திரட்டுவது முதல் வேலை. அக்குடும்பங்களின் தேவைகளைத் தெரிந்துகொள்வது அடுத்த வேலை. அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவது, உதவிகளைப் பெற வழிவகை செய்வது அதற்கு அடுத்த வேலை. குடும்பங்களுக்காகக் கடிதங்களை எழுதிக்கொடுத்தல், குடும்பங்களுக்கு வரும் கடிதத்தைப் படித்துக் காட்டுதல், அவர்களின் குழந்தைகளைத் தகுதி வாய்ந்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்த்தல், வேண்டிய உதவிகளைப் பெறவுதவுதல் ஆகியவையே நாம் செய்ய வேண்டிய தொண்டாகும். மதுரை மாவட்ட ஆசிரியர்கள் காட்டிய வழியை மற்ற மாவட்ட ஆசிரியர்களும் பின்பற்றுவதைப் பார்க்கிறேன். விரைவில், எல்லா மாவட்டங்களிலும், போர் வீரர்களின் குடும்ப நலத் தொண்டை ஆசிரியர் குழுக்கள் ஏற்றுக் கொண்டன என்ற நல்ல செய்தியை எதிர்பார்க்கலாமா?


மூளை வேலை செய்வோர் ஒவ்வொருவரும், சிறிது உடலுழைப்பிலும் ஈடுபடவேண்டும். இது தனிநபர் உடலுக்கு நல்லது. நீண்டகாலவாழ்வுக்கும் இன்றியமையாதது. அது மட்டுமா? நாட்டு நலனுக்கும் நல்லது. பாதுகாப்பிற்கும் இன்றியமையாதது. ஆகவே ஆசிரியர்களும் ஆசிரியைகளும் அன்றாடம், பள்ளித் தோட்டவேலைகளில் ஈடுபடும்படி வேண்டுகிறேன். மாணவர்களையும் மாணவிகளையும் தோட்ட வேலையில் ஈடுபடுத்திவிட்டு நாம் மேற்பார்வை இடுவது மட்டும்

போதாது. முடிந்த அளவு நாமும் அவர்களோடு கலந்து தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும்.

பள்ளிகளில் தோட்டங்களை உருவாக்குவதோடு நிற்கலாமா? நாம் குடியிருக்கும் வீட்டுப் புழைக்கடையிலும் தோட்டம் அமைக்க வேண்டும். இயற்கையோடு இயைந்த இன்பத்தைச் சிறிது நேரமாவது பெற வேண்டாவா? யாம் பெற்ற இன்பம் பிறரும் பெறட்டுமே! அக்கம்பக்கத்தில் இருப்பவர்களையும் தோட்டம் போட தூண்டுவோம்.

பொன்னையும் பணத்தையும் கொடுத்து, கொடுக்க வைத்து, தோட்டம் போட்டு, போடவைத்து, நாட்டுப் பற்றையும், ஒற்றுமையுணர்ச்சியையும், தியாக உணர்ச்சியையும் நாடு முழுவதும் போற்றி வளர்த்து, மதிப்பெண் குறைந்தவர்களுக்குத் தனிக் கவனம் செலுத்தி, கூடுதலாகக் கற்பித்து, தேர்ச்சியைப் பெருக்கி, பாதுகாப்பைப் பலப்படுத்தி, அச்சத்தை வென்று, அமைதியைக் காத்து அறிவையும் அன்பையும் எல்லோரும் பெற உதவுவது நம் தலையாய கடன்; தனிப் பொறுப்பு. இதை நிறைவேற்றி, வெற்றி காண்போம் வாரீர். வெல்க பாரதம்.





# செலவைக் குறைப்போம்

## 6

சிக்கனம் வளர்க்கும்; ஆடம்பரம் தேய்க்கும். இதை நம் முன்னோர் உணர்ந்திருந்தனர். ஆன முதலில் அதிகம் செலவானால் என்னவாகும்? மான மழியும்; மதி கெடும்; எல்லோர்க்கும் பொல்லரா வோம். இக்கருத்தைக் கல்விக்கூடங்களில் கற்றோம்; ஆனால் வாழ்க்கையில் மறந்தோம். விளைவு? கடன் தொல்லை.

பொய்யாமொழியார், வள்ளுவர். அவரை நாமெல் லோரும் போற்றுகிறோம். சிக்கனத்தைப்பற்றி அவர் என்ன சொல்லுகிறார்?

> 'ஆகாறு அளவு இட்டிது ஆயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை'

என்கிறார். இதன் பொருள் என்ன? வருவாய் சுருக்கமாக இருந்தாலும் செலவைப் பெருக்காவிட்டால் துன்பம்

---

*[சென்னை வானொலி நிலையத்தில் 31—1—1963-இல் நிகழ்த்திய உரை]*

ஒன்றுமில்லை. இதுவே வள்ளுவர் முடிவு. இதை மறுக்க முடியுமா? மறக்கத்தான் கூடுமா? ஆனால் மறந்துவிட்டோமே! நெடுநாளாகத் தொடர்ந்துவரும் பழக்கங்களால் மறந்துவிட்டோமே!

தமிழ்நாட்டில் பல குடும்பங்கள், திருமணத்திற்கு வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாது கலங்குகின்றன. இது நாம் அறியாதது அல்லவே. ஐந்துநாள் திருமணம் ஒருநாள் திருமணமாகக் குறைந்து வருகிறது. அது வரையில் மகிழ்ச்சியே. அதைப்போலச் செலவும் ஒன்றில் ஐந்தாகச் சுருங்கினால் அல்லவா நன்மையாக இருக்கும்? அப்படிச் சுருங்கவில்லையே. மாறாக, ஒன்றுக்கு ஐந்தாகப் பெருகிவிடுகிறதே. செல்வர்கள் செலவைப் பார்த்து, மற்றவர்களும் போட்டி போட்டுக்கொண்டு செலவழித்துவிடுகிறார்களே. இது நல்லதா? புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொள்ளலாமா? இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாம் எப்படி மீளுவது? சிந்திக்க வேண்டாவா நாம்? இப்போதைய நெருக்கடியிலாவது திருமணச் செலவையும் இருப்பிற்குத் தக்கபடி சுருக்கிக்கொள்ள வேண்டாவா?

பகட்டுச் செலவுப் பழக்கம் பள்ளிக்கூடங்களுக்குப் வந்துவிட்டது. விளையாட்டுப் போட்டிவிழா, இலக்கிய மன்றவிழா என்று பல காரணங்களைக் காட்டி, எத்தனையோ பள்ளிக்கூடங்களில் வீணான செலவு நடக்கிறது. ஆடம்பரமான செலவு நடக்கிறது. வறுமை மிகுந்த இந்நாடு இத்தனைப் படாடோபச் செலவுகளைத்

தாங்கமுடியுமா? பள்ளிக்கூடச் சம்பளம்கூட கட்ட முடியாது என்று சம்பளமில்லாப் படிப்பு வந்துவிட்டது. ஆனால் ஏழை மாணவர்களிடமும் மேற்படி நிகழ்ச்சிகளுக்காகத் தனிக்கட்டணம் வாங்கி, அதை 'வேட்டு' விடுவது சரியா? தகுமா? முறையா?

இலக்கியமன்றச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்காக எவ்வளவோ பணம் வீணாகிறதே! அவரை அழைக்கப்போன செலவு; இவர் வந்துபோன பயணச்செலவு, விழா விருந்துச் செலவு, அலங்காரச் செலவு என்று செலவு செய்து கொண்டே போகலாமா? சாதாரண காலத்திலேயே இத்தகைய செலவு, தேவையில்லாத டம்பாச்சாரி செலவு; இன்றைய நெருக்கடியில் மன்னிக்கமுடியாத குற்றச்செலவு. இத்தகைய செலவுகளை நிறுத்துமாறு எல்லாக் கல்விக்கூடங்களையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டின் தனிச்சிறப்புகளில் ஒன்று பூமாலை. நம்மைப்போல மாலைகட்டக்கூடியவர்கள் வேறு யாரும் இல்லை. இது நமக்குப் பெருமை. ஆனால் அச்சிறப்பே நமக்குக் கழுத்தறுப்பாக மாறலாமா? தமிழ்நாட்டில் மட்டும் அன்றாடம் ஏறக்குறைய, பத்தாயிரம் பொதுக் கூட்டங்கள் நடக்கின்றன; சிறிதும் பெரிதுமாக நடக்கின்றன. இவற்றில் மாலையிடுவதில் பலத்த போட்டி. யாருடைய மாலை பெரியது, அழகியது என்று போட்டி போட்டு மாலை சூட்டுகிறோம். பள்ளிக்கூடங்களிலும் அப்படியே. கூட்டமொன்றிற்குச் சராசரி பத்துமாலைகளாவது செலவாகும். ஆகவே அன்றாடம் கிட்டத்தட்ட

இலட்சம் மாலைகளாவது பொதுக்கூட்டங்களில் போடப் படுகின்றன. இதற்கு ஏராளமான பூக்கள் தேவைப் படும் அல்லவா? அத்தனையும் பங்களாத் தொட்டி களிலா பூக்கின்றன? வேறொன்றிற்கும் பயன்படாத இடத்திலா பூக்கின்றன? இல்லையே. முன்னர் உணவுத் தானியங்களும் காய்கறிகளும் விளைந்த நிலங்களில் அல்லவா இப்போது பூக்களைப் பயிர் செய்கிறோம்? பூக்கள் பயிரிடும் நிலப்பரப்பு ஆண்டுக்கு ஆண்டு பெருகிக்கொண்டே போகிறதே. இப்படிச் சென்றால், உணவு தன்னிறைவைப் பெறுவதெப்படி? இதை, கற்றவர்களாகிய நாமாவது சிந்திக்கவேண்டாவா? மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டாவா? இப்போதைய நெருக்கடி தீரும் வரையிலாவது, மாலை யிடுவதைத் திருமணங்களுக்கும் வழிபாடுகளுக்கும் மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். பொதுக்கூட்டங்களில், கல்விக்கூட நிகழ்ச்சிகளில் நிறுத்திவிடுங்கள். இதன் மூலம், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை உணவுப் பொருள் உற்பத்திக்கு மாற்றிவிட உதவுங்கள்.

இதுமட்டுமா? சென்னை போன்ற பெரிய நகரங் களுக்கு வெளியூர்களிலிருந்தே பூக்கள் வரவேண்டும். அன்றாடம், எத்தனையோ சாமான் வாகன்களும் லாரி களும் இதற்கே ஒதுக்கவேண்டியதாகிறது. பொதுவாக வேறு அவசர காரியங்களுக்கும், சிறப்பாக இராணுவத் திற்கு வேண்டிய பொருள்களையும், தளவாடங்களையும், போர்க்கருவிகளையும், விரைந்து கொண்டுசெல்லவும் வேண்டிய வாகன்களையெல்லாம், அலங்காரப் பொருள்

களுக்கு முடக்கிப்போட்டுவிடுவது நல்லதா?' நல்ல தல்ல. ஆகவே, இதற்குக் கல்விக்கூடங்கள், மற்றவர் களுக்கு வழிகாட்டிகளாக இருப்பனவாக!

பல கல்விக்கூடங்களில், தேவைக்குமேல், அதிக மான, நோட்டுப் புத்தகங்களை வாங்கும்படி மாணவர் களைக் கட்டாயப்படுத்துகின்றனர். அளவிற்கு மிஞ் சினல் அமிர்தமும் நஞ்சு. நோட்டுப் புத்தகங்கள் மட்டும் இதற்கு விலக்கா? இவற்றின் எண்ணிக்கை பெருகுவது, யாருக்கும், எதற்கும் உதவியாகாது; மாருக, சுமையாகும்; வீண் செலவாகும். இதில் சிக்கனத்திற்கு இடமிருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இனியாவது, நோட்டுப் புத்தகங் களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

பரிட்சை நடத்தாத பள்ளிக்கூடம் ஒரு பள்ளிக் கூடமாகாது. ஆனல் பரிட்சைகள் நடத்த, நாம் செலவு செய்கிறோமே, அந்த அளவு செலவு தேவையா? சின்னஞ்சிறு வகுப்புகளுக்குக்கூட, அச் சிட்ட கேள்வித் தாள்களைக் கொடுத்துக் குழந்தை களைப் பீதியடையச் செய்யவேண்டுமா? இது கல்வி வளர்ச்சிக்கும் தீங்கு; பணத்திற்கும் கேடு. இதை, ஏனே மறந்துவிட்டோம்? பரிட்சை என்பது, பெரும் பாலும் வகுப்புச் சூழ்நிலையில் நடக்கவேண்டியதல்லவா? இயல்பாக நடக்கவேண்டும்; அடுத்தடுத்தும் நடக்க வேண்டும். கெடுபிடி இல்லாமலும் நடக்கவேண்டும். அப்போதல்லவா பரிட்சை மெய்யான அளவுகோலாக இருக்கும்? இல்லாவிட்டால் அது குதிரைப் பந்தயமாக

அல்லவா மாறிவிடும்? இப்போதைய பள்ளிப் பரிட்சை முறையில், சீர்திருத்தத்திற்கும் சிக்கனத்திற்கு நிறைய இடமிருக்கிறது. இதைச் சிந்தியுங்கள். ஆ அமரச் சிந்தியுங்கள். அதன் பின்னர் அடுத்த ஆண்டி லிருந்தாவது, சீர்திருத்தத்தையும் சிக்கனத்தையு மேற்கொள்ளுங்கள்.

இதுவரையில் பள்ளிக்கூடப் பொதுச்செலவு சிக்கனத்தைப்பற்றிச் சிந்தித்தோம். இனி, தனியா செலவு சிக்கனத்தைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். நம் தேவைகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை எவை? அடிப்படைத் தேவைகள் ஒரு பிரிவு பழக்கத் தேவைகள் மற்றொரு பிரிவு. முந்தியவை இன்றியமையாதவை. குடியிருக்க வீடு, உண்ண உணவு, உடுக்க உடை, இவை அடிப்படைத் தேவை களாகும். இருக்கும் உடை நன்றாயிருக்கும்போதே 'பேஷன்' மாற்றத்திற்காகப் புது உடை தைப்பது பழைய நகையில் ஒரு குறையும் இல்லாதிருந்து 'மாடல்' மாற்றத்திற்காகப் புதுநகை செய்வது, பு பிடித்தல், சினிமா பார்த்தல் ஆகியவை பழக்க தேவைகள். அடிப்படைத் தேவைகளோ குறை வேண்டாம். பழக்கத் தேவைகள், இன்றைய உச்ச நிலை யிலேயே இருக்கவேண்டுமா? அவற்றை ஓரளவாவது குறைத்துக் கொள்ள முடியாதா? குறைத்துக் கொள்ள வேண்டாவா? உணவைக்கூட, உபவாசமிருந்து குறைக்கிறோம் அல்லவா? அதைப்போலவே புதுப் புது ஆடை அணிகலன்களை வாங்குவதையும், ஒ

முறைக்குப் பலமுறை ஒரே படம் பார்ப்பதையும், பொடியின் அளவையும், சிகரெட்டின் எண்ணிக்கையையும் குறைத்துக்கொள்ள வேண்டும். இது நம்முடைய உடனடியான கடமை. சென்ற இரு உலகப்போர்களிலும், உலோகாயுதம் பேசும் மேலை நாட்டினரும் சொந்தத் தேவைகளைக் கூடப் பெருமளவு குறைத்துக் கொண்டல்லவா தாய்நாட்டிற்காகப் போராடினார்கள்? ஆத்மிகம் பேசுகிற நாம் நம் சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துள்ள இந்நிலையில் சொந்தத் தேவைகளை மட்டுப் படுத்திக்கொள்ளத் தயங்கலாமா? கூடாது; கூடவே கூடாது. நீங்கள் தயங்கமாட்டீர்கள், எத்தகைய கடுந் தியாகத்தையும் மேற்கொள்ள முன்வருவீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

தமிழ் நாட்டில், அநேகமாக, எல்லோருமே, தட்டிலும் இலையிலும் ஏராளமான சாப்பாட்டை வீணாக எறிந்துவிடுகிறோம். மக்களைக் காக்கவேண்டிய உணவைக் குப்பையில் எறிந்து விடலாமா? இது தவறல்லவா? இத்தவற்றையும் நாம் எல்லோரும் சீக்கிரத்திலே போக்கிவிடவேண்டும்.

பல துறைகளிலும் அதிகமாக உழைத்து, கூடுதல் திறமையோடு உழைத்து, உற்பத்தியைப் பெருக்கும் நேரத்திலும், தனியாரின் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிலும் சேதாரத்திற்கு இடமில்லாமல் பார்த்துக்கொள்ளுவோமாக. பழக்கத் தேவைகளுக்கான செலவுகளையும் குறைத்துக் கொள்ளுவோமாக. கல்விக்கூடங்களில் நடக்கும் விழாச்

செலவுகளையும் கூடியவரையில் அடியோடு நிறுத்திவிட உறுதி கொள்ளுங்கள். பலவழிகளிலும் சிக்கனத்தைக் கையாண்டு, சேமிப்பைப் பெருக்கி, பாதுகாப்பைப் பலப்படுத்தி, உரிமையோடும் பெருமையோடும், அன்போடும், அருளோடும் பல்லாண்டு வாழ்வோமாக. வெல்க பாரதம்.






# பள்ளிகளில் அன்னதானம்

## 7

பயிரிட நீர் வேண்டும். எவ்வளவு நீர்? எத்தனை தடவை, பாய்ச்ச வேண்டும்? இவை பயிர் வகையைப் பொறுத்தவை. காட்டுப் பயிருக்கு, இரண்டொரு முறை பாய்ச்சினால் போதும். சிறுமழையும் இருந்தாற் போதும். நுட்பப்பயிருக்கு அன்றாடம் நீர் இறைக்க வேண்டும்.

மனிதப் பயிர் இதற்கு விலக்கல்ல. மனிதப் பயிர் ஆயிரங்காலத்துப் பயிர். அரிய பயிர். காலை உணவு மாலை வரையில் தாங்குவதில்லை. நடுப்பகல் பசியெடுக்கிறது. நடுப்பகல் உணவு நாளைவரை தாங்குவதில்லை. இரவு பசிக்கிறது. எனவே, மனிதப் பயிரை வளர்ப்பது தொல்லையானது. அதிலும் மிகத் தொல்லையானது, கல்விப் பயிர். கல்விக்குப் பகை, பசி. இன்றுமட்டுமல்ல; என்றுமே பகை. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்'. இது பழம் பாடல்; மெய்ப்பாடலுங்கூட. பசித்த வயிற்றோடு, கல்விப் பயிரை வளர்க்க முடியாது என்பதை நம் முன்னோர் உணர்ந்தனர். எப்படித் தெரிகிறது? இங்கும் அங்கும் இருக்கும், பழைய வேத

பாடசாலைகளைப் பார்ப்போம்; தேவார பாடசாலைகளைப் பார்ப்போம். அப்பழம் பள்ளிக்கு மானியம் எழுதி வைத்துள்ளனர், அக்காலப் பெரியோர். எதற்கு மானியம்? ஆசிரியர் சம்பளத்திற்கு மட்டுமா? கட்டிட பராமரிப்பிற்கு மட்டுமா? மாணவர்களின் உணவிற்கும் சேர்த்தே, மானியம் விட்டிருக்கின்றனர். என்னே அவர்கள் தெளிவு! உயர்ந்த வேதத்தையும் சிறந்த தேவாரத்தையும் தொடர்ந்து கற்கப் பசியற்ற நிலை தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

வேதப் படிப்பிற்கும் தேவாரம் ஓதவும் மட்டுமே உணவு வேண்டுமா? இக்காலப் படிப்பிற்கு உணவு தேவையில்லையா? எக்காலப் படிப்பிற்கும் கவனம் தேவை. கவனத்திற்குப் பசியற்ற நிலை தேவை. ஆகவே வீட்டில் இல்லையென்றால் பள்ளியில் உணவு தேவை.

நவீன கல்வி, எல்லோருக்குமான கல்வியாகத் தொடங்கவில்லை. ஆட்சிக்குத் துணைசெய்யும் குறுகிய நோக்கத்தோடு தொடங்கியது. எனவே எல்லோரும் படிக்கவில்லை. படித்தவர் சிலர். படிக்காதவர் பலர். அக்காலத்தில் படித்த சிலரிலும் பெரும்பாலோர்க்கு வீட்டில் சாப்பாட்டுக்கு இருந்தது. தப்பித் தவறி எங்கோ இரண்டொருவர், சாப்பாட்டிற்கில்லாத ஏழைகள், முற்காலத்தில் பள்ளியில் இருந்திருக்கலாம். அவர்களும் பட்டினியாகப் படிக்கவில்லை. கிறித்தவ, இந்து, மிஷனரிகளால் நடத்தப்பட்ட இலவச 'இல்லங்

களில்' சாப்பிட்டுவிட்டுப் படித்தார்கள், அவர்கள். வீட்டில் கிடைக்காத சோறு 'இல்லத்தில்' கிடைத்த தால், பசிக்கவலையின்றிக் கவனமாகப் படித்தார்கள். நன்ருகத் தேறினர்கள்.

காலம் மாறிற்று. கல்வி எல்லோருடைய பிறப் புரிமை என்ற உணர்ச்சி வளர்ந்தது. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற தெளிவு வந்தது. விளைவு? பள்ளிகளில் ஏழைகள் அதிகமாகச் சேர்ந்தனர். பசியையும் தாங்கிக்கொண்டு படிக்க முயன்றனர். நீர் குறைந்த பயிரின் விளைச்சல் எப்படியிருக்கும்? முழு விளைச்சலாக இராது. அரைப் பலன், கால் பலன் மட்டுமே கிட்டும். அப்படியே நம் கல்வி முயற்சியும் அரைப் பலன், கால் பலனே கொடுத்தது. இவ்வளவு மட்டுமா? இளமையில் வறுமை, நினைப்பிலே கோணலை ஏற்படுத்தியது, நிலையாக ஏற்படுத்தியது. இது நம் நாட்டு அனுபவம் மட்டுமல்ல, முன்னேடி நாடு களின் அனுபவமும் இதுவே. பலன்?

பள்ளிக்கூட உணவுத்திட்டம் முன்னேடி நாடுகளில் எல்லாம் உருவாயிற்று. வீட்டிலே உண்ண முடியாத ஏழை மாணவர்கள் பள்ளியில் உண்டார்கள். கவன மாகக் கற்றனர்; நன்ருகத் தேறினர்; நேராக வளர்ந் தனர்.

பள்ளிக்கூட அன்னதானம், தமிழ் நாட்டிலும் துளிர்த்தது. பரவலாக அல்ல; எங்கோ சில பள்ளி

களில். ஊரறிய அல்ல; இரண்டாம் பேருக்குத் தெ யாமல். காரணம்? 'எஞ்ஞான்றும் தன்னை வியவற்க என்ற தமிழ்ப் பண்பாட்டில் ஊறிப்போனதால்.

ஏழ்மை சில பள்ளிக்கூடங்களோடு நின்றிருந்தால பள்ளிக்கூட அன்னதானமும் அவற்ருேடு நின்று விடலாம். எல்லாப் பள்ளிகளுக்கும் ஏழை மாணவர்க வரும் நிலை ஏற்பட்டது. எனவே, பரவலான பள்ளி கூட அன்னதான இயக்கம் தேவைப்பட்டது. உள்ள நிலையை ஊரறியச் சொல்லி, உதவி கோரும் நிலை வளர்ந்தது. 1956-ஆம் ஆண்டு ஜூலை மாதம் எட்டய புரத்தில், பள்ளிக்கூட மதிய உணவுத் திட்டம் முளைத் தது. எட்டயபுர மன்னரின் தொடக்கப் பள்ளியிலேயே முளைத்தது. 1957-ஆம் ஆண்டு நவம்பர் வரை முழுக்க முழுக்க மக்கள் இயக்கமாகவே பரவிற்ப பின்னர் அரசினர் உதவியும் வந்தது.

அன்னதானம் நமக்குப் புதிதல்ல. இது, தொன்று தொட்டு நாம் செய்து வரும் அறம். மக்கள் இனத் திற்கு மட்டும் செய்யும் அறமல்ல. அன்ருடம் செய்ய முடியாதவர்கள்கூட, பண்டிகையன்று, உண்பதற்கு முன்னே, முதற்பிடி உணவைக் காக்கைக்கு இட்டு உண்ணும் இயல்புடையவர்களாயிற்றே. வெளியிலே செய்யும் அன்னதானம், உயிரை மட்டும் வளர்க்கும் பள்ளியிலே செய்யும் அன்னதானம், 'உயிர் கொடுத் துக் கல்வியையும் வளர்க்கும். ஒரே கல்லிலே இரு மாங்காய்களை வீழ்த்துவதுபோல், பள்ளிக்கூட உண

வளிப்பின் மூலம், அன்ன தானம் கல்வி தானம் ஆகிய இரு தானங்களின் பலனைப் பெறலாம் என்று கண்டனர். எனவே பள்ளிக்கூட அன்ன தானத்திற்கு உதவ முன் வந்தனர். யார் யார்? எப்படி எப்படி?

எல்லோரும் மதிய உணவுத் திட்டத்திற்கு உதவி புரிகின்றனர். எல்லா மதத்தினரும் உதவுகின்றனர். எல்லாச் சாதியினரும் உதவி புரிகின்றனர். எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் கொடுக்கின்றனர். நகர மக்கள் கொடுக்கின்றனர். நாட்டுப்புற மக்கள் கொடுக்கின்றனர். இன்று, இது, வேற்றுமைகளுக்கு அப்பாற் பட்ட பொதுமக்கள் இயக்கமாக நடந்துவருகிறது.

இதற்கு வேண்டிய பொருள் எங்கிருந்து வருகிறது? பொதுமக்களிடமிருந்து ஒரு பங்கு; அரசினரிடமிருந்து மற்றொரு பங்கு. சரி பங்கல்ல. சாப்பாட்டின் நடைமுறைச் செலவில், பத்தில் நான்கு பங்குக்குக் குறையாமல் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்க வேண்டும். மீதி ஆறு பங்கை அரசினர் கொடுக்கின்றனர். இரண்டையும் கொண்டு மதிய உணவுத் திட்டம் நடக்கிறது. எத்தனை பள்ளிகளில்? 27,000 தொடக்கப்பள்ளிகளில். எத்தனை பேருக்கு உணவு அளிக்கிறார்கள்? 12,15,000 பேருக்கு.

இதை யார் நடத்துகிறார்கள்? ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு மதிய உணவுக்குழு உண்டு. சில இடங்களில், பல பள்ளிகளுக்காக ஒரு மதிய உணவுக்குழு ஏற்படுத்திக்கொள்ளுவதும் உண்டு. நன்கொடையாளர்கள்

மட்டுமே இதற்கு உறுப்பினர்கள். நன்கொடை கொடுக்காதவர்கள் எவ்வளவு பெரியவர்களாயினும் அதில் உறுப்பினர்களாக முடியாது. உறுப்பினர் தலைவர், துணைத் தலைவர், நிர்வாகக் குழுவினர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பார்கள். பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் செயலாளர். அவர் நன்கொடை கொடுக்க வேண்டியதில்லை.

இப்படிக் குழுக்கள் அமைத்துக்கொண்டு பள்ளிக்கூட உணவுத் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். அரசினரின் உதவித் தொகை, ஒவ்வொரு காலாண்டும் ஓரளவு முன்பணமாகக் கொடுக்கப்படுகிறது. அக் காலாண்டு முடிந்ததும், கணக்குத் தீர்த்து மீதி (எஞ்சிய தொகை) கொடுக்கப்படுகிறது.

ஊரார் நன்கொடை, சிலரிடம் இருந்தும், பலரிடம் இருந்தும் வருகிறது. சில இடங்களில், இரண்டொரு தனி நபரே முழுத் தொகையையும் கொடுக்கிறார்கள. மற்ற இடங்களில் பலரும் கொடுக்கிறார்கள். நிதி மிகுந்தவர்கள், நூற்றுக்கணக்கில் கொடுக்கிறார்கள். சம்பளம் வாங்குவோர், மாத, ஆண்டு சந்தாவாகக் கொடுக்கிறார்கள். கிராம மக்கள் பலர், அறுவடைக்காலத்தில், களத்து மேட்டிலே, முதல் அளவையைச் சாமிக்கும் இரண்டாம் அளவையை ஊர்த் தொழிலாளிக்கும் அளந்துவிட்டு, மூன்றும் அளவையைப் பள்ளிக்கூட அன்னதானத்திற்கு அளக்கின்றனர். கிராமங்களில் இதற்கான வசூல், பெரும்பாலும் தானியம் தவசமாகவே கிடைக்கிறது. தேவைப்படும் புளியையும் விறகையும் நன்கொடைப்


பொருள்களாகவே பெறும் பள்ளிகள் பலப்பல. பல கிராமங்களில் வீட்டிற்கு வீடு, இதற்காகப் பிடி அரிசி ஒதுக்கிவைத்து உதவி செய்கிருர்கள். ஊர்ப்பொது மக்களிடமிருந்து வாங்கிய பொருள்களையும் அரசினரிட மிருந்து பெறும் பண உதவியையும் கொண்டு, ஐந்தாறு ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது, பள்ளிக்கூட அன்ன தான இயக்கம். கிடைக்கும் ரொக்கத்தைப் பாங்கியில் கட்டிவைத்து, தேவைப்படும்போது வாங்கிக் கொள்ளு கிருர்கள்.

இவ்வியக்கத்திற்கு இப்போது வெளிநாட்டி லிருந்தும் உதவி வந்துள்ளது. அமெரிக்காவிலிருந்து, "கேர்" அமைப்பின் மூலம் நன்கொடை வந்துள்ளது. இது அமெரிக்க அரசினரின் உதவியல்ல. அமெரிக்கப் பொதுமக்கள் உதவி. அவர்கள் தங்களுக்குள் நன் கொடை திரட்டி, அதைக்கொண்டு, மதிய உணவிற்கு வேண்டிய அரிசி, ரவை, பால் பொடி, நெய் ஆகிய வற்றை வாங்கி அனுப்பியுள்ளனர். பெற்ற உதவி சிறு உதவியல்ல. மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை ஆண்டுதோறும் கொடுக்கின்றனர். இங்கேயுள்ள மாணவர்களுக்கு, அங்கேயுள்ள அமெரிக் கர்கள், உண்டியல் வசூலித்து இவ்வளவு கொடுக்கிற போது, எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் இருக்கிற நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டா இருப்போம்?

அறத்தான் வருவதே இன்பம் என்பதை உணர்ந்த மக்கள், எல்லா ஊர்களிலும் ஈத்துவக்கும் இன்பம் பெறு கிருர்கள். சில இலட்சமாக இருக்கும் அவர்கள் பல

இலட்சமாகப் பெருகுவதாக! அருளுணர்ச்சியும் அறச் செயல்களும் தொடர்ந்து சுரப்பதாக! பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு நிலைப்பதாக, தழைப்பதாக! எல்லோரும் கற்க, எல்லோரும் வாழ, வழி பிறப்பதாக! வையம் வாழ்வதாக!





# பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

8

காலமும் கருத்தும் நில்லா. ஒன்றோடு ஒன்று போட்டியிட்டு வளர்கின்றன; மாறுகின்றன. கருத்து வளர்ச்சியைக் கல்வித்துறையிலும் காண்கிறோம்.

'படிப்பா, நமக்கு எதற்கு அது?'

'படித்து, என் மகன் என்ன தாசில் வேலையா பார்க்கப் போகிறான்?'

'நம் பிள்ளைகளுக்கு எப்படிங்க படிப்பு வரும்?'

'ஏதோ என் வேலையைத் தெரிந்து கொண்டால்—குல வித்தையைக் கற்றுக்கொண்டால்—பிழைத்துக் கொள்வான். அவனுக்கு எதற்குப் படிப்பு?'

நாட்டு மக்கள் முன்பெல்லாம் இப்படித்தான் கூறுவார்கள். அது அந்தக்காலம். இன்று என்ன சொல்லுகிறார்கள்? படியுங்கள்.

'என் துன்பம் என்னோடு போகக்கூடாதா?'

'நான் எப்படியிருந்தாலும் என் பிள்ளையாவது, நாலெழுத்துக் கற்றுக்கொள்ளக்கூடாதா?'

---

(திருச்சி வானொலி நிலையத்தில் 26—3—1960-இல் ஆற்றிய உரை]

'மேல் வகுப்பு படிக்க, எங்கள் பிள்ளைகள் எவ்வளவு தூரம் போவது?'

'உங்கள் பிள்ளைகளை, இப் படுவழியில் இவ்வளவு நெடுந்தூரம், நடக்க விடுவீர்களா? அதைப்போலதானே இவர்களும்?' இன்று நாட்டுப்புற மக்களும் கேட்கும் கேள்விகள் இவை.

கல்வி சிலருக்கு என்ற கருத்து மறைந்தது. கல்வி பலருக்கு என்ற கருத்து வளர்ந்தது. அதுவும் மறைந்தது. கல்வி எல்லோருக்கும் என்ற எண்ணம் எழுந்தது; பறந்தது, எல்லாப் பக்கமும். விளைவு? ஆயிரக் கணக்கான புது தொடக்கப்பள்ளிகள், நூற்றுக்கணக்கான உயர்நிலைப்பள்ளிகள். ஏழைகளுக்கும் எட்டிற்று பள்ளிக்கூடம்.

பள்ளி வைத்ததும், கல்வி வளர்ந்துவிடும் என்ற கருத்து பழமையாகிவிட்டது. அதை உணரும் வாய்ப்பு அன்றொருநாள் கிட்டிற்று. மலையாள மாவட்டத்தில் பெரிந்தல்மண்ணா என்னுமூரில், உயர்நிலைப்பள்ளியில் மாணவர் இருவர் பசியால் மயங்கி விழும் சோகக் காட்சியை 1956-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் நான் கண்டு பதறினேன். ஆயத்தொடங்கினேன். அந்நிலை — அதாவது பசிநிலை—அங்கிங்கெனாதபடி பல பள்ளிகளிலும் பரவியிருப்பது தெரிந்தது. ஏழைகளுக்கு பள்ளி வந்தும், படிப்பு வராததற்கு ஒரு காரணம் விளங்கிற்று. 'மாணவ மாணவிகளுக்குப் பகல் உணவு கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்ற ஆலோசனை பிறந்தது. நெஞ்சிலுற்றதை சொல்லில் ஆக்கினேன். அரசினர் ஆதரித்தனர். ஆசிரியர்கள் மற்றொரு புதுப்

பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். நாட்டுமக்கள் நன்கொடை தந்தனர். பகலுணவுத்திட்டம் பட்டி தொட்டியெல்லாம் பரவிற்று. இன்று 24,447 தொடக்கப்பள்ளிகளில் 8,79,000 மாணவ மாணவிகளுக்கு உணவு கொடுக்கப்படுகிறது. 453 உயர்நிலைப்பள்ளிகளில் 12,559 மாணவ மாணவிகள் இத்தகைய உணவு பெறுகிறார்கள்.

உண்ண உணவளிக்க வழிவகை வகுத்தோம். பசியைத் தீர்த்தோம். உடலை மறைக்க உடை வேண்டாவா? அரையில் கட்டிய கந்தலோடு பள்ளிக்கு வரும் சிறார் எத்தனை எத்தனை ஆயிரம் பேர்! உடுக்க உடையில்லாமல் பள்ளிக்கு வரக்கூசும் பெண்கள்தான் எத்தனை பேர்! இவர்கள் குறையையும் அகற்றுவது மக்கள் கடமையல்லவா? ஆகவே, பல ஊர்களிலும் உடைதானமும் தொடங்கியிருக்கிறார்கள்.

உலகத்திலும் உயர்ந்த பல்கலைக்கழகம் எது? கல்லூரியிலும் கற்காத உண்மைகளை, ஏட்டில் காணாத உண்மைகளை, நாட்டிலே கற்கவேண்டும். கல்வித்துறை பற்றி நாடு கற்பிக்கும் பாடம் என்ன? பள்ளிகளில் இருந்து படிக்கப் போதுமான இடமில்லை. வாங்கின நாற்காலி முக்காலியாகி விட்டது. பிள்ளைகள் உட்காரப் பலகையில்லை. பாடம் படிக்க புத்தகம் இல்லை. பார்த்துப் படிக்க படமில்லை; எடுத்துப் படிக்க நூலில்லை; மறைந்து கழிக்க, கழிவிடம் இல்லை. இப்படிக் குறைகள் பல. எல்லாப் பள்ளியிலும் அல்ல. பல பள்ளிகளில்; ஆயிரக்கணக்கான பள்ளிகளில்.

5N127,S
127646

வகுப்புகளைத் தனித்தனி நடத்தப் போதுமான இடமும், பாடங்களைக் கற்பிக்கத் துணைக்கருவிகளும், நற்பழக்கங்களைப் பயில ஏற்பாடும், படிக்கும் பழக்கத்தை வளர்க்க நூல் நிலையமும் இல்லாத பள்ளிகளில் தரமான கல்வியை எப்படி எதிர்பார்ப்பது? 'கல்வி எல்லோருக்கும்; ஆனால் தரமான கல்வி சிலருக்கே' என்று சும்மா இருப்பதா? கல்வி எல்லோருக்குமானதுபோல் தரமான கல்வியும் எல்லோருக்கும் ஆகவேண்டாவா? அப்படி யாவதற்கு, பள்ளிகளின் அடிப்படைத் தேவைகள் நிறைவுபெற வேண்டாவா? எப்போதாவது ஒரு நன்னாள் நிறைவு பெறுவதா அல்லது விரைவில் நிறைவு பெறுவதா? இவ்வெண்ணங்கள் எழுவது இயல்பு.

'நாட்டின் அடிப்படை கிராமங்களே. அக்கிராமங்கள் ஒவ்வொன்றும் தன் தேவையைத் தானே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தை எதிர்பார்த்து நிற்கக்கூடாது' என்ற அண்ணல் காந்தியடிகளாரின் அறவுரையும் முன்னே நிற்கிறது. ஆம், இதுவன்றோ வழியும் முறையும். விரைவிலும் சிக்கனமாகவும் தேவைகளை நிறைவுபடுத்த வேறு முறையேது? ஊரின் பொறுப்புகளை, ஊராரே, விருப்புடன் எடுத்துக்கொள்வதன்றோ ஊராட்சி.

குடியாட்சியில் மக்கள் வேறு, அரசு வேறு? அரசினரே எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதென்றாலும் அதற்கு வேண்டிய வரியைக் குடிகள் தானே கொடுக்கவேண்டும். வரி வசூல் தனிக்கைக்கும் பங்கீட்டுத் தனிக்கைக்கும் ஆகும் செலவையும் சேர்த்

;ல்லவா கொடுக்கவேண்டும். அதற்குப் பதில் பெரு மளவு, ஊராரே பள்ளிகளைச் சீரமைப்பது நல்லதல்லவா?

ஆகவே ஒவ்வொரு பள்ளியின் வசதிக்குறைகளையும் அவற்றைப் போக்கும் பலவழிகளையும் அக்கம் பக்கத்தி லுள்ள மக்களிடம் கூறத் திட்டமிட்டோம்.

மக்களைக்கொண்டே, மக்களின் பள்ளிக்கூடங்களை சீரமைக்கும் முயற்சி 1958-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள், செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, கடம்பத்தூரில், முதல் பள்ளிச் சீரமைப்பு மாநாடாக உருவாயிற்று. 76 பள்ளிகளுக்காக, பொது மக்கள் 336 திட்டங்களை ஏற்றுக் கொண்டனர். அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 15,000. அவற்றில் மாநாட்டிற்குமுன் நிறைவேறிய திட்டங்களின் மதிப்பும் மாநாட்டில் கொடுத்த ரொக்கமும் சேர்ந்து 1,300 ரூபாய்களாயின. இவ்வியக்கம் இன்று பல மாவட்டங் களுக்கும் பரவியுள்ளது. இதுவரை 88 மாநாடுகள் நடந்துள்ளன. 13,300 பள்ளிகளுக்காகப் பொது மக்கள் ரூ. 4,75,00,000 மதிப்புள்ள 91,000 திட்டங்களை மேற்கொண்டனர். இவற்றில் மாநாடு களுக்குமுன் நிறைவேறிய திட்டங்களின் மதிப்பும், மாநாடுகளில் அளிக்கப்பட்ட பொருள்களின் மதிப்பும், ரொக்கமும் சேர்ந்து ரூ. 1,80,00,000 ஆகும்.

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும், ஊற்றுப் பெருக்கால் உலகூட்டவில்லையா? நம் மக்களும் அப்படியே. இவர்கள் வறுமைப்பட்டிருக்கலாம். ஆனல் குணம் அற்றுவிட்டதா? இல்லை. இல்லை. அன்று

முல்லைக்குத் தேரீந்த பாரியின் பரம்பரை இன்றும் இருக்கிறது. அவர்கள் பள்ளிக்குப் பல பொருள் ஈவதைக் காண்கிறோம். மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகன் பரம்பரை, மாணவ மாணவிகளுக்கு உடை தானம் செய்ய முனைந்து நிற்பதைப் பார்க்கிறோம். இதை நடத்தும் முறை என்ன? முதன்முதலில் ஒரு வட்டாரத்தை வரையறுத்துக்கொள்ளவேண்டும். அங்குள்ள ஒவ்வொரு தொடக்க, உயர்நிலை, பயிற்சிப் பள்ளியைப் பற்றியும் தனித்தனி 'சர்வே' செய்ய வேண்டும். அப்பள்ளிக்கு வகுப்பு இடம், விளையாடுமிடம், மரச்சாமான்கள், தோட்ட வசதிகள், கருவிகள், பாடத்திற்கான துணைக்கருவிகள், நூல்நிலையம், குடிக்க, கழிக்க வசதிகள் ஆகிய தலைப்புகளில் மொத்தத் தேவை என்ன, இருப்பவையென்ன, மேற்கொண்டு பெற வேண்டியவை எவை எவை என்று 'சர்வே' மூலம் உணரவேண்டும். அவற்றை அந்தந்த ஊராரிடம் உரைக்கவேண்டும். உவந்து கொடுப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பட்டியலில் பதிந்துகொள்ள வேண்டும். இது ஆயத்த வேலை. சில வாரங்கள் இப்படிச் செய்த பிறகு ஓரிடத்தில் மாநாடாகக் கூடி 'சர்வே'யின்போது ஒவ்வொரு பள்ளியிலும் இருந்த குறைகள் என்ன, அவை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்யப்பட்டன என்று தெரிவிக்கவேண்டும். கொடுத்த பொருள்களையெல்லாம் ஊரறியக் காட்டவேண்டும். முதலில் வேண்டுமானால் பல பள்ளிகள் சேர்ந்து பெரு மாநாடாக நடத்தலாம். ஆனால் சிறு மாநாடாக நடப்பதே நல்லது. அப்போதுதான் ஒவ்வொரு பள்ளியின்

நிலையை உணரவும் ஏராளமான பொது மக்கள் அதில் பங்கு கொள்ளவும் முடியும்.

இவ்வியக்கத்தின்மூலம் விளைந்த நன்மைகள் இதோ:—

1. புதுக் கட்டிடம் கட்டுதல்
2. பள்ளிகளுக்கு மின்சார வசதி
3. பள்ளியை விரிவாக்குதல்
4. பள்ளியைப் பழுது பார்த்தல்
5. பள்ளிக்கு வண்ணம் தீட்டுதல்
6. தோட்டதானம் பெறுதல்
7. தோட்டம் அமைத்தல்
8. கக்கூசுகள் அமைத்தல்
9. குடிநீர் வசதி செய்தல்
10. துணைக்கருவிகள் பெறுதல்
11. கரும்பலகைகளுக்கு வண்ணம் அடித்தல்
12. நூல் நிலையங்கள் அமைத்தல்
13. பூகோள, விஞ்ஞான, சரித்திர பாடங்களுக்கான படங்களைப் பெறுதல்
14. இலவச உடை வழங்கல்
15. பகலுணவிற்குப் பாத்திரங்கள், பொருள்கள் பெறுதல்.
16. ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்
17. கோழிப்பண்ணை வைத்தல், தேனீ வளர்க்கத் தொடங்குதல்.

இப்பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தின் நோக்கம், மக்களைக் கல்வி பற்றியும் உள்ளூர் பள்ளிகளைப் பற்றி

யும் சிந்திக்க வைத்து, அதற்கான சாதாரண பொறுப்பு களையெல்லாம் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதே பொருளும் பணமும் கொடுக்கத் தூண்டுவது வழியே ஒழிய குறிக்கோள் அல்ல. தன்னூக்கமும் தன் முயற்சி யும் உள்ள புதிய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சி யில் பள்ளிச் சீரமைப்பு ஒரு வழி. ஆகவே இத்திட்டத் தின் வெற்றி தோல்வியை, பெற்ற வசூலைக் கொண்டு மதிப்பிட வேண்டா. மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன மாற்றத்தைக்கொண்டு மதிப்பிடுவதே சரி. நாட்டி லுள்ள ஏழை எளிய மக்களெல்லாம், படியாத பல்லா யிரக்கணக்கான மக்களெல்லாம் இவ்வியக்கத்தில் பங்கு கொண்டு, பலவகையிலும் உதவி புரிந்துள்ளார்கள். மனுப்போட மட்டுமே பழகிய மக்களெல்லாம், தங் களையே நம்பி, அரிய, ஆக்க வேலைகளில் ஈடுபடச்செய்து விட்டது பள்ளிச் சீரமைப்பு இயக்கம். இருந்த நிலம் முழுவதையும் நிலதானமாகக் கொடுத்த திருமங்கலம் தாலுக்கா வன்னிவேலன்பட்டி மாடசாமி, வத்தலகுண்டு கடைநிலை ஊழியர் வேல்நாயகர், திருக்கண்ணபுரம் வேலாயுதம் வாய்க்கால் கரையார். 'ஆண்டு ஊதியம் அத்தனையும் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று அள்ளிக் கொடுத்த குமாரபுரம் பண்ணையாள் கோபால நாயக்கர், பல்லாண்டுகளாகச் சிறுகச்சிறுகச் சேர்த்துப் பழங்கலத் தில் பதுக்கி வைத்திருந்த ரூபாய் ஐயாயிரத்தையும் அறிவுப்பணிக்கு ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தாராள மாக வழங்கிய ஆனந்தமங்கலம் மகாலட்சுமி அம்மை யார், முதலிய சாதாரண மக்கள் முதல், செல்வந்தர் வரை. பலரது வள்ளல் தன்மையை வெளிக்கொணர்ந்து

ஒன்று சேர்ந்து காலத்துக்கு ஏற்ற ஆக்கத்துறையில் ஊக்குவிக்க இவ்வியக்கம் பயன்படுகிறது.


இப்புதுப் பணியில், அரும் பணியில், பெரும் பணியில் ஆசிரியர்கள் ஆற்றிவரும் தொண்டு அளவிடற்கரியது; போற்றுதற்குரியது; ஊக்குதற்கேற்றது. ஊர் தோறும் மறைந்து கிடந்த கொடையாளிகளையெல்லாம் தேடி ஒன்று சேர்த்து அவர்களையெல்லாம் லட்சக்கணக்கில் இம்முயற்சியில் ஈடுபடுத்தி இவ்வியக்கத்தை வெற்றி பெறச்செய்து வருபவர்கள் ஆசிரியர்களே. அதிலும் சிறப்பாகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களே. அவர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். அவ்வாசிரியர்களை பல நிலையிலிருந்து கண்காணிக்கும் அதிகாரிகளும், தேசத் தொண்டர்களாக ஆசிரியர்களின் தோழர்களாக மாறியுள்ளதையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வியக்கம் கல்வித்துறை தொடங்கிய இயக்கம் என்பது உண்மையே. ஆனால் அவர்களுடைய தனி இயக்கம் அல்ல. இதனால் அதிகாரிகளுக்கோ ஆசிரியர்களுக்கோ சொந்த நலன் ஒன்றுமில்லை. இது மக்கள் இயக்கம். மக்களுக்காக நடக்கும் இயக்கம். நம் நாட்டில் 'வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் மேவ' த்துடிக்கும் எல்லோருக்கும் பொதுவான இயக்கம்.

ஆகவே இந்நல்லுணர்ச்சியை, தன்னம்பிக்கையை, தன் முயற்சியைக் காத்து வளர்த்துப் பேணுவது எல்லோருடைய கடமை. ஏழைகள்பால் சிந்தனையுடையவர்களின் தனிக்கடமை.

எனவே இன்றைய குழந்தை நாளைய இந்தியன் என்பதை உணர்வோமாக! 'குடி செய்வார்க்கில்லை பருவம், மடிசெய்து மானம் கருதக்கெடும்' என்ற குறளை நினைவு படுத்திக் கொள்வோமாக. எல்லோருக்கும் கல்வி மட்டுமல்ல, தரமான கல்வியை, தன் முயற்சியால், கொடுக்க முயலும் பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தை நன் முறையில் நடத்துவோமாக. வெற்றி பெறுவோமாக.





# "ஞானத் தந்தை" திட்டம்

## 9

நம் மக்கள் அனைவரும், எல்லாத் துறைகளிலும், சாதி, சமய, இட வேறுபாடின்றி, சம வாய்ப்பு பெற வேண்டுமென்பது நமது குறிக்கோள். தமிழ்நாட்டில் கல்வித் துறையில் எல்லோருக்கும் சம வாய்ப்பு வந்து விட்டது. மக்களுக்கு எவ்வளவு கல்வி போதும்? ஐந்தாவது வகுப்பு வரையில் மட்டும் படித்தால் போதுமா? போதவே போதாது. எட்டாவது வகுப்பு வரை படிக்கிற படிப்பும் அவ்வாறே; அரை ஆறு தாண்டுவதற்கு ஒப்பாகும். குறைந்தது, பதினொன்றாவது வகுப்பு வரையிலாவது, எல்லோரும் படிக்க வேண்டும். இதற்கு வாழுமிடம், வறுமை குறுக்கிடக் கூடாது. இதுவே நமது குறிக்கோள். இக்குறிக்கோளை நோக்கித் தமிழ்நாடு சென்ற பத்தாண்டுகளாகப் பெரு நடை போட்டு வந்துள்ளது. இதன் விளைவு என்ன?

இன்று தமிழ்நாட்டில் 300 மக்கள் உள்ள ஒவ்வோர் ஊரிலும் தொடக்கப் பள்ளிக்கூடம் உள்ளது. உயர்தொடக்கப்பள்ளிக் கல்வி வசதிக்காக, உயர்

[திருச்சி வானொலி நிலையத்தில் 4—10—1963-இல் நிகழ்த்திய உரை]

தொடக்க அல்லது உயர் ஆதாரப்பள்ளி 2 அல்லது 3 மைல் வட்டாரத்திற்கு ஒன்ருவது இருக்கிறது. இத்தகைய பள்ளிகளின் எண்ணிக்கை 5,000 க்கு மேற்பட்டது. எல்லா ஊர்களுக்கும் 5 மைல் தொலைவிற்குள் ஓர் உயர்நிலைப்பள்ளியாவது இருக்க வேண்டுமென்று திட்டமிட்டு, பெருமளவு வெற்றி பெற்ருேம். இன்று, 1,900 உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன.

தொடக்கப்பள்ளி, உயர்தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி என்று பலநிலைப் பள்ளிகளை அமைத்துவிட்டால் மட்டும் போதுமா? ஏழைகளும் பள்ளியில் சேர்ந்து பயில வேண்டாவா? எனவே, 11-வது வகுப்பு வரை பொருளாதார அடிப்படையில் இலவசக்கல்வி யென்று அரசினர் ஆணை இட்டனர். முன்பு, குறிப்பிட்ட சில சாதியைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்குத்தான் இலவசப் படிப்பு. இப்போது இச்சலுகை, சாதி அடிப்படையிலில்லை. வறுமை அடிப்படையில் அளிக்கப் படுகிறது. இது சென்ற சில ஆண்டுகளாக.

'எல்லோரும் கற்க வேண்டும்' என்பது மட்டுமல்ல நம் குறிக்கோள். ஒன்ருகவும் கற்க வேண்டும். முன்பு தொடக்கப்பள்ளிப் பாடத்திட்டம் ஒன்ருகவும் உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம் வேருகவும் இருந்தன. தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விரும்பினுல் கற்கலாம் என்ற விதி இருந்தது. அதாவது கிராமப் பகுதியினருக்கும் ஏழைகளுக்கும் ஒருவகைக் கல்வியும், மற்றவர்களுக்கு வேறுவகைக் கல்வியும் என்ற நிலை இருந்தது. இது நீடித்தலாகாது என்று கருதி இன்று எல்லாப் பள்ளிகளிலும்

முதல் எட்டு வகுப்புகளுக்கும் ஒரே பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

எல்லோரும் ஒன்றாக இருந்து கற்க வேண்டும், மாணவர்களிடையே ஏற்றத் தாழ்வு இருத்தல் கூடாது என்ற நன்னோக்கத்தோடு சீருடை முறையும் தோன்றிச் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

எல்லோரும் படித்தால், ஒன்றாகப் படித்தால் மட்டும் போதுமா? நன்றாகவும் படிக்க வேண்டு மல்லவா? 10 அல்லது 11 ஆண்டுகளில் படித்ததை மூலதனமாகக் கொண்டு, 60 அல்லது 70 ஆண்டுகள், இந் நவீன உலகிலே வாழவேண்டும். ஆகவே, பெறு கிற கல்வி, தரத்தில் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

"நாங்களெல்லோரும் படித்தகாலத்துக் கல்விக்கு இக்காலக் கல்வி தரத்தில் குறைந்தது" என்பது சிலர் கூற்று. இது உண்மையல்ல. என்னால் இக்கூற்றை ஒப்புக்கொள்ள முடியவில்லை. எனினும், 'மேலும் தரமான கல்வி அளிக்க வேண்டும், அளிக்கமுடியும்' என்பதை நினைவு படுத்தத்தான் வேண்டும்.

கல்லூரிக்கு, உயர்நிலைப்பள்ளியிலிருந்து மாணவர் கள் வருகின்றனர். உயர்நிலைப்பள்ளிக்கு, தொடக்கப் பள்ளியிலிருந்து பிள்ளைகள் வருகின்றனர். கல்வியின் தரம் உயரவேண்டுமென்றால் கல்லூரியில் மட்டுமோ, உயர்நிலைப்பள்ளியில் மட்டுமோ தரமாகச் சொல்லிக் கொடுத்தால் போதுமா? அங்கு வருகிறவர்களும் தர மானவர்களாக இருக்க வேண்டுமே? எனவே தொடக் கப் பள்ளிகளிலும் தரமுள்ள கல்வி அளிக்கப்பட வேண்டும். தரமுள்ள கல்வியை வெறும் ஆணையால்,

இரண்டொரு மாறுதல்கள் செய்வதன் மூலம், அளிக்க முடியாது. ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளில் அளித்துவிடமுடியாது. நம்பிக்கையோடு, சளைக்காமல் சில ஆண்டுகளாவது பாடுபடவேண்டும். அதுவும் வழி வகை தெரிந்து பாடுபடவேண்டும், அப்போதுதான் வெற்றி கிட்டும்.

தரமான கல்விக்கு இடவசதி, துணைக்கருவிகள், பயிற்சி பெற்ற போதிய ஆசிரியர்கள், திருப்தியுள்ள ஆசிரியர் சமுதாயம், பெற்ரோர் ஒத்துழைப்பு, மாணவர்களின் ஒருமனப்பட்ட ஈடுபாடு ஆகிய எல்லாம் வேண்டும். இன்னும் என்ன வேண்டும்? இவை மட்டும் இருந்தால் போதுமா? தலை வேறு, கைகள் வேறு, கால்கள் வேறு, உடல்வேறு, என்ற உறுப்புகள் தனித் தனியாக, உயிருள்ள மனிதனாகுமா? உயிருள்ள மனிதன் என்ருல் இவை அனைத்தும் இணைந்திருக்க வேண்டும். குருதி, நிற்காமல், எல்லா உறுப்புகளிலும் பாய வேண்டும். இதைப்போலவே தொடக்கக் கல்வி, உயர் நிலைக்கல்வி, கல்லூரிக்கல்வி இவை மூன்றும் இணைந் திருக்க வேண்டும். ஒன்றிலிருந்து ஒன்றுக்கு அறிவுக் குருதி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.

அந்நியன் ஆட்சிக்காலத்தில், பொதுமக்களுக்குக் கல்வி கிடைக்கவில்லை. பரம்பரை படிப்பாளிகள் வீட்டுக் குழந்தைகள், சில பணக்காரர்கள், அலுவ லாளர்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டுமே அப்போது படித்தனர். படிப்புச் சூழ்நிலையிலேயே வளர்ந்த சிலரே படித்த அக்காலத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் நிறைய பேர் தேருமல் தவறினர்கள். அத்தேக்கத்தின் காரண

மாக. நடுவில் படிப்பை நிறுத்தியவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் ஏராளம். அந்நிலை இன்றும் நீடித்திருக்கலாமா? எல்லோரும் எல்லா வகுப்பிலும் தேறினல்லவா கல்விக்காக ஆகும் செலவுக்கு முழுப் பலன் உண்டு. பொருளாதாரத்துறையில் வளரவேண்டிய இந்நாடு, இவ்விரயத்தைத் தொடர்ந்து ஏற்பட விடலாகாது.

ஆண்டுக்கு ஒருமுறை கல்விக்கூடங்களுக்குப் புதுச்சேர்க்கைப் பருவம் வருகிறது. அப்போது, கல்லூரி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், ஆகிய ஒவ்வொரு பிரிவினரும், சேர முயலும் மாணவர்களைப் பற்றித் தீர்ப்புக்கூறி, அதோடு நின்று விடும் நிலையே உள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து தங்களிடம் வரும் மாணவர்கள் தரமானவர்கள் இல்லையென்று சொல்லுவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. அதேபோல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும், தொடக்கப் பள்ளியிலிருந்து, "எத்தகைய மாணவர்கள் வருகிறார்கள், பாருங்கள்!" என்று நொந்து கொள்வதோடு நின்றுவிடத்தான் முடிகிறது. நகரங்களிலுள்ள பெயர்போன சில உயர்நிலைப்பள்ளிக்கூடங்களிலோ மனுப்போடும் பல மாணவர்களில், தங்களுக்கு வேண்டிய அளவிற்குச் சிலரைப் பொறுக்கிக்கொண்டு, மற்றவர்களைத் தள்ளி விடுகின்றனர். ஆனால். ஏராளமான உயர்நிலைப்பள்ளிக்கூடங்களில், வந்த மாணவர்களையெல்லாம், ஏதாவது ஒரு வகுப்பில் சேர்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்கூட, நொந்து

கொள்ளும் முறையைத்தான் பின்பற்றுகின்றனர். 'தேர்ச்சி ஏன் குறைந்தது?' என்றால், 'ஏழை மக்கள், பிற்போக்கு மக்கள்' என்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்வதைத்தான் அநேகப் பள்ளிகளில் பார்க்கலாம். இந்த நிலை இன்னும் இருக்கலாமா?

எல்லோரையும் தேற வைக்கும் பணியை நாட்டிற்குச் செய்யும் நற்பணியாகக் கொள்ள வேண்டும். கல்வியில் தவறிப் போகிற ஒவ்வொரு இந்திய மாணவனும் 'நாட்டின் வளர்ச்சிக்குத்தடை; எதிரிக்கு உதவுபவன்' என்கிற உணர்ச்சி எல்லோருக்கும் ஏற்படவேண்டும். இத்தகைய உணர்ச்சி இப்போது துளிர்த்துக்கொண்டு வருகிறது. அதன் பயனாக மேற்பார்வைப் படிப்புத் திட்டம் நடை முறைக்கு வந்துள்ளது. தொடக்கப் பள்ளிகளிலும்கூட மெல்லக் கற்போருக்காக இம்முறை வந்துள்ளது. ஆசிரியர் மேற்பார்வையில் மாணவர்களுக்குக் கூடுதலான பயிற்சி கிடைக்கிறது.

இன்று தொடக்கப்பள்ளிகள் தனித்துநின்று இயங்குகின்றன. உயர்நிலைப் பள்ளிகளும் தம் போக்கிலே போகின்றன. கல்லூரிகளின் போக்கும் அம்மாதிரியே. இவைகளுக்குள் தொடர்பு இல்லை. ஆகவே ஒரு நிலையினர் எதிர்பார்ப்பது மற்ற நிலையினருக்குத் தெரியாது. மேலும் கீழ் நிலையிலுள்ளவர்கள் எவ்வளவுதான் செய்யக்கூடுமென்பது மேல் நிலையிலிருப்பவர்களுக்குத் தெரிவதில்லை. தொடர்பற்ற இந்நிலையை மாற்றி எல்லா நிலையிலும் உள்ளவர்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்த வேண்டும். இது உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை. தமிழ்நாட்டில்

ஏறத்தாழ 1500 உயர்நிலைப்பள்ளிகளும், 5000-க்கும் மேற்பட்ட உயர் தொடக்க, உயர் ஆதாரப்பள்ளிகளும் உள்ளன. பிந்தியவைதான் முந்தியவைகளுக்கு நாற்றங்கால். இவைகளுக்குள் ஒரு தொடர்பு ஏற்படுத்துவது முதல் வேலை. நகரங்களிலுள்ள சில பள்ளிகளைத் தவிர ஏனைய உயர்நிலைப்பள்ளிகளில், பெரும்பாலும் சுற்றியுள்ள உயர்தொடக்கப்பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்கள்தாம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆகவே 'ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியும் அதைச்சுற்றி இருக்கும் உயர் தொடக்கப்பள்ளிகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளலாம். சாதாரணமாக ஓர் உயர்நிலைப்பள்ளிக்கு 4 அல்லது 5 உயர் தொடக்கப் பள்ளிகளோடுதான் தொடர்பு தேவைப்படும். சிலவற்றிற்குச் சிறிது குறைவாகவும், சிலவற்றிற்குச் சிறிது கூடுதலாகவும் இருக்கலாம்.

ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியும் சுற்றியுள்ள உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு "ஞானத்தந்தை"யாக இருப்பதன்மூலம் இத்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு தொடக்கப்பள்ளியும், மாதாந்தர பாடத்திட்டம் போட்டு பள்ளி ஆய்வாளரிடம் அங்கீகாரம் பெற வேண்டும் என்பது இப்போதைய விதி. இப்புதிய "ஞானத்தந்தை" திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர், மாதாந்தர பாடத்திட்டத்தைச் சம்பந்தப்பட்ட உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்குக் காட்ட வேண்டும். 5 முதல் 8 வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தைக் காட்டினால் போதும். உயர்

நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், தன் உதவி ஆசிரியர்களுடன் கலந்து அப்பாடத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம், அல்லது அதில் சில மாற்றங்கள் கூறலாம். அந்தந்த வகுப்புக்குக் கொடுத்த மொத்தப் பாடங்களையும் அந்த ஆண்டுக்குள்ளேயே முடித்தால் போதும். இதைக் கவனத்தில் கொண்டு மாற்றங்கள் கூறலாம். எனவே ஒரு மாதத்திற்குள்ள பகுதியைக் குறைக்கும்படியோ இன்னொரு மாதத்திற்குள்ள பகுதியைக் கூட்டும்படியோ, ஆலோசனை கூறுவதில் தவறில்லை. இவ்வாலோசனைப்படி மாற்றியமைக்கப்பட்ட மாதாந்தர பாடத்திட்டத்தை உயர் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் தம்முடைய பள்ளியில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். ஒருமாதம் அவ்வாறு நடத்திய பிறகு நிலைமையை உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியருக்கு நேரில் தெரிவிக்க வேண்டும். எதிர்ப்படும் சங்கடங்களையும், சிக்கல்களையும் அவருக்குத் தெரிவித்தால் அவற்றைத் தீர்ப்பதற்கு ஆலோசனை கிடைக்கும். அந்த ஆலோசனைப்படி அடுத்து வரும் மாதங்களில் பாடம் நடத்தினால் பலன் அதிகரிக்கும். சில சமயங்களில் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், குறிப்பிட்ட பாடம் நடத்தும் உபவழிகளையும், முறைகளையும் உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குக் கூறவும் முடியும்.


தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாதம் ஒரு முறை உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு தொடர்பு கொள்வது நலம். இன்னும் அடிக்கடி தொடர்பு கொள்ள முடியுமானால் அதைத் தடுப்

பாரிலே. எவ்வளவு நெடுந்தொலேவிலிருந்தாலும், குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு முறையாவது உயர் நிலேப்பள்ளித் தலேமை ஆசிரியரைக் கலந்து ஆலோசிக்க வழி வகை செய்து கொள்ள வேண்டும். இத் தொடர்பினுல், உயர்நிலேப்பள்ளித் தலேமை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளித் தலேமை ஆசிரியர்களேப் புரிந்துகொள்ளவும், தொடக்கப்பள்ளித் தலேமை ஆசிரியர்கள், உயர்நிலேப்பள்ளி ஆசிரியர்களின் ஆலோசனேயையும் உதவியையும் பெறவும் வழி ஏற்படுகிறது. மேலும், இரு பிரிவு ஆசிரியர்களுக்குமிடையே நட்பும் நம்பிக்கையும் வளரும்.

ஆசிரியர் அத்தனே பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போன்று, நல்ல அண்ணன் தம்பிகள் போன்று பணியாற்றுகிற நிலேயும் உருவாகும். ஆண்டுத் தொடக்கத்தில் உயர்நிலேப்பள்ளியில் சேரவரும் மாணவர்களேக் கண்டு உயர்நிலேப்பள்ளிகள் மிரளும் நிலே இருக்காது. அதோடு தங்கள் முந்தைய அனுபவத்தைக் கொண்டு எந்தப் பள்ளியில் எந்த மொழி அல்லது பாடம் அதிக கவனம் பெற வேண்டும் என்பதைக் காலாகாலத்தில் சொல்லி முழுப்பயனும் உண்டாவதற்கான வழிகளேக் கூறவும் முடிகிறது. ஆகவே தொடக்கப்பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்களே அவர்கள் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வார்கள். மேலும், மாணவர்களேச் சேர்க்கவரும் காலத்தில் மட்டும் இவ்வாறு கூறினுல், "சேர்க்காமல் தள்ளிவிடுவதற்காக ஒரு சாக்குச் சொல்லுகிருர்கள்" என்று மிரளுகிறவர்கள்கூட,

தமிழ்நாட்டு ஆசிரிய சமுதாயம் இப்பெரும் பணியிலும், புதுப் பணியிலும், நற்பணியிலும் வெற்றி கொள்வார்களாக!






## 10

சுவரை வைத்தே சித்திரம் எழுதவேண்டும். உடலை வைத்தே உயிரை ஓம்பமுடியும். இவை நம் எல்லோருக்கும் தெரியும், இன்று மட்டுமல்ல. நெடுநாளைக்கு முன்னரே, நம் முன்னோர்களுக்கே தெரியும். அதனால் தான்,

"உடம்பார் அழியின்உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே"

என்றார் திருமூலர்.

இந்நூற்றாண்டின் கவியாகிய பாரதியாரும்,

'தோளை வலிவுடையதாக்கி உடல்சோர்வும் பிணி பலவும் போக்கி, அரிவாளைக்கொண்டு பிளந்தாலும் கட்டுமாறு உடல் உறுதி' வேண்டினார். அவரது வேண்டுகோள், நமது இலட்சியமாக வேண்டும்.

---

[சென்னை வானொலி நிலையத்தில் 19—1—1962-இல் செய்த சொற்பொழிவு]

உடல் நலமும் உடல் வலிவும் எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் தேவை. எனினும் இத்தலைமுறைக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கும் அதிகம் தேவை. என்?

சில நூறு ஆண்டுகளின் தேக்கத்திற்குப்பின், சென்ற சில ஆண்டுகளாக, பல்வேறு துறைகளிலும் பல முன்னேற்றங்களையும் சாதனைகளையும் கண்டு, இன்று சுதந்திர இந்தியா வெற்றி நடை போடுகிறது. இதோடு, நிற்காமல் மேலும் வளர, முன்னேற திட்டமிட்டுப் பணி புரிகிறோம். இப்பெரும் பொறுப்பில் பங்கு கொள்ளும் இந்தியர் எல்லோருக்கும் - இளையோராயினும் முதியோராயினும் - உடல் ஊக்கமும் உடல் நலமும் இருந்தால் மட்டுமே, எதிர்பார்க்கும் முன்னேற்றத்தைப் பெறலாம். இத்தகைய உடல்நலமும் உடல் ஊக்கமும் தொடர்ந்த பயிற்சியால் விளைவன. பலவகை உடற் பயிற்சிகளின் தேவையை வற்புறுத்திக் காட்டவே 'தேசிய விளையாட்டு வாரம்' கொண்டாடப்படுகிறது.

இவ்வாரத்தில் நம்நாட்டில் சிற்றூர்களிலும் நகரங்களிலும் வாழும் கோடிக்கணக்கான மக்கள் உடல்நலம் பேணும் விளையாட்டுகளில் பங்குபெற வேண்டும் என்பது நம் நோக்கம். இத்தகைய பங்கு இந்த ஒரு வாரத்தோடு நிற்கக்கூடாது. விளையாட்டை மறந்தவர்களுக்கு அதைப் புதுப்பித்துக் கொடுக்கவே இவ்வாரம் துணை செய்யும். இத்தகைய விளையாட்டுகளின் மூலம் மக்களின் உடல்வலிமை, தாக்குப்பிடிக்கும் திறன், செயலாற்றும் திறன், ஆகியவற்றை வளர்க்க முடியும். ஒருவனுடைய ஆளுமையில் அறிவு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சிகளோடு உடல்வலிமையும் இடம் பெறுகின்றது.

இவ்வுண்மையைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்த இவ்வாரக் கொண்டாட்டம் பயன்படுவதாக.

விளையாட்டுகள் பெரியவர்களுக்கு மட்டுமா? இல்லை. பள்ளி செல்லும் எல்லாச்சிறுவர் சிறுமிகளும் உடற்பயிற்சி விளையாட்டுகளில் ஈடுபடவேண்டும். இது வரை ஈடுபடாதவர்கள் இவ்வாரத்திலிருந்தாவது ஈடுபட, இக்கொண்டாட்டம் தூண்டுவதாக. அத்தகைய ஈடுபாடு இவ்வாரத்தோடு நிற்கக்கூடாது. இவ்வாரத்தில் விளையாட்டுகளில் பங்கு பெறுவதோடு மட்டும் நில்லாமல், தொடர்ந்து அவைகளில் ஈடுபட வேண்டும். உடற்பயிற்சி, வழக்கமாகி நம் எல்லோருடைய வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துவிட வேண்டும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உழைப்பே மகிழ்ச்சியின் ஆணிவேர். நோயற்ற வாழ்வும் உழைப்பிற்கு வலிமையும்பெற, தொடர்ந்த உடற்பயிற்சியும் விளையாட்டுகளும் தேவை. இவ்வுண்மையை நம் முன்னோர்கள் அறிந்தார்கள் என்று கண்டோம். நம்மவர்கள் மட்டுமா அறிந்தார்கள். பிற நாட்டவரும் நெடுநாளைக்குமுன் உணர்ந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் பண்டைய கிரேக்கர்கள்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் என்று நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். இதைத் தொடங்கியவர்கள் யார்? பண்டைய கிரேக்கர்கள். எப்போது? கி. மு. 776-ஆம் ஆண்டில் தொடங்கினர். எந்த ஊரில் தொடங்கினர்? கிரேக்க நாட்டிலுள்ள ஒலம்பியா என்னும் ஊரில் தொடங்கினர். இவ்விளையாட்டுகளை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோடையின் இறுதியில் நடத்தினர்.

இவ்விளையாட்டுகள் மிக முக்கியமானவை என்று கருதினர். ஆகவே, போரில் ஈடுபட்ட காலங்களிலும் இவ்விளையாட்டுகளுக்காக, போரை நிறுத்திவைப்பர், நாடு முழுவதிலும் அமைதி நிலவச்செய்வர். இவ் விளையாட்டுகளைப்பற்றி நாடு முழுவதும் முரசறைந்து அறிவிப்பர்.

ஒலிம்பிக் விளையாட்டுகளில், ஓட்டப்பந்தயம், தாண்டும் பந்தயம், எறியும் பந்தயம், குதிரையேற்றம், மல்யுத்தம், குத்துச் சண்டை, கவசமணிந்து சண்டை யிடும் பந்தயம், உடல் வலிவைக் காட்டும் போட்டிகள் ஆகியவை இடம்பெற்றன. இவை ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு, ஒலிவ இலைகளாலான மகுடத்தைப் புனைவர். இலைமுடிக்கு என்ன போட்டி! என்ன சிறப்பு! பேரீச்ச மரத்தின் கீற்றொன்றையும் வெற்றிச்சின்னமாக அணிவிப்பர். வெற்றி பெற்றவர்களை, ஊர்வலமாக மரியாதையுடன் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச்செல்வர். இசை வல்லார் பரணிபாடிப் போற்றுவர். கைதேர்ந்த சிற்பிகள் கல்லில் வெற்றி வீரர்களின் வடிவங்களை வடிப்பதும் உண்டு.

புகழ்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டு விழா கி. பி. 893-க்குப் பிறகு நின்றுவிட்டது. இவ்விழாவை, கிரேக்க நாட்டைக் கைப்பற்றிய ரோமானிய அரசர்கள் தடை செய்துவிட்டனர். ஏன்? இது பாமரர்களின் கூத்தாம். அடக்குபவர்கள், அடக்கப்பட்டவர்களின் வலிவைக் குறைக்க ஒரு சாக்கு.

ஒரு பத்து நூற்றுண்டுகாலம் இவ்விழா நடக்கவில்லை. பின்னர் 1894-இல் கோபர்ட்டின் என்ற பிரஞ்சு நாட்டவர், எர்பர்ட் என்ற ஆங்கிலேயரின் துணையோடு, இதுபற்றி ஒரு சர்வதேச காங்கிரசைக் கூட்டினர். அதன் விளைவாக சர்வதேச ஒலிம்பிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவினர் ஒலிம்பிக் விளையாட்டுகளை உயிர்ப்பித்தனர். 1896-ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 6-ஆம் நாள் இவ்விளையாட்டுகள் மீண்டும் தொடங்கின. எவ்விடத்தில்? கிரேக்க நாட்டின் முக்கிய நகரமாகிய ஏதென்ஸ் நகரத்தில் தொடங்கின. அன்றுமுதல், இவ்விளையாட்டுகள், நான்காண்டிற்கு ஒருமுறை, தவருது, நடத்தப்படுகின்றன. இரண்டாவது உலகப் பெரும்போர் நடந்த காலத்தில் மட்டும் இவை நடக்கவில்லை.

இவ்விளையாட்டு விழாவில் முன்சொன்ன விளையாட்டுகளோடு, பல்வேறு புதுப்பந்தயங்களும் இடம் பெற்றன. அவையாவன: நீச்சல், துப்பாக்கியால் சுடுதல், கால் பந்து, கைப்பந்து (Volley ball), ஹாக்கி, கூடைப் பந்து, சைக்கில் விடுதல், எடை தூக்குதல் ஆகியவை.

இப்போட்டிகளில் உலகத்தின் பல்வேறு நாடுகளும் பங்கு பெறுகின்றன. இப்போட்டிகளில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது மாரதான் (Marathon) ஓட்டப் பந்தயம் ஆகும். இருபத்து ஆறுமைல் முன்னூற்று எண்பத்தாறு (386) கெஜம் ஓடவேண்டிய இப்போட்டி. ஓடுபவரின் தாக்குப்பிடிக்கும் திறனை நன்கு சோதிப்பதாகும்.

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் சில சடங்குகளும் சில சம்பிரதாயங்களும் உண்டு. இவ்விழா தொடங்கு முன்னர், ஒலிம்பியா என்ற ஊரிலிருந்து ஒரு தீப்

பந்தத்தை ஏற்றுக்கொண்டு, விழா நடக்கும் இடத்திற்கு எத்தனை ஆயிரம் மைல் தொலைவில் இருந்தாலும், ஓட்டமாகப் போய்ச் சேர்வர். ஒருவரே, அத்தனை தூரமும் ஓடமுடியுமா? முடியாது. ஆகவே குறிப்பிட்ட தொலைவு வரை ஒருவர் ஓடுவது என்பதே ஏற்பாடு. ஓடுபவர், குறிப்பிட்ட தொலைவை அடைந்ததும், வேறொருவரிடம் தீப்பந்தத்தைக் கொடுப்பார். அவர் அதை ஏந்திச் சென்று அடுத்தவரிடம் கொடுப்பார். இப்படியே பலரிடம் கைமாறி, ஓடி, விழாவிடத்திற்கு வந்து சேரும். இப் பந்தம் வழியிலும், விழா இடத்தில் போட்டிகள் முடியும் வரையிலும் அணையாது இருக்கும்படி பார்த்துக்கொள்வர். விழா முடிந்தபிறகே, அணைத்துவிடுவர்.


இந்தியப் பெருநாட்டிலும் வழிவழியாகப் பல உடற் பயிற்சிகளும் விளையாட்டுகளும் புகழ்பெற்றுள்ளன. ஓடுதல், மற்போர், வாள்போர், சிலம்பம், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. முற் காலத்தில் சிலம்பக்கூடங்களும் உடற்பயிற்சிக்கூடங் களும் பல ஊர்களில் பரவியிருந்தன. தமிழ்நாட்டில், சிலம்பப் பயிற்சி சிறந்து விளங்கியது, அண்மையில்கூட.


தமிழ்நாட்டின் சில பகுதிகளில் பொங்கல் விழாவின் போது 'மஞ்சுவிரட்டு' இன்றும் நிகழ்கிறது. கொழுத்து, வளர்ந்து முறுக்கேறிய காளையொன்றின் கழுத்திலோ கூரிய கொம்புகளிலோ வேட்டியையோ அல்லது வேறு பொருளையோ முடிந்து, அதைத் திறந்த வெளியில் விரட்டி விடுவர். நெஞ்சுரமும் உடல் உறுதியும் மிக்க இளைஞர்கள் அக்காளையோடு மல்லாடி அடக்கிப் பிடித்து, கழுத்திலோ, கொம்பிலோ கட்டப்பட்டுள்ள பொருளைப் பற்றிக்கொள்வர்.

வீரத்தையும் வலிமையையும் சோதிக்கும் இவ்விளையாட்டு பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் ஒன்றாகும்.

"எவன் ஒருவனுடைய உணவும் வேலைமுறையும் உடற்பயிற்சியும் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளனவோ, எவன் ஒருவனுடைய உழைப்பும் ஓய்வும் பொருந்துவன வாக உள்ளனவோ, எவன் ஒருவனுடைய தூங்கும் நேரமும் உழைக்கும் நேரமும் முறைப்பட வரையறுக்கப்பட்டிருக் கின்றனவோ அவனுக்கே உலகில் சிறந்த பயன்கள் கைகூடும்" என்பது கீதோபதேசம்.

இந்நல்லுரைகளை அறிந்தால் போதாது. பின்பற்று வது மிக முக்கியம். எனவே, நாம் உழைக்கவும் தெரிந்து, விளையாடவும் தெரிந்து, உடல் நலமும் உள்ள உரமும் அறிவுத் தெளிவும் பெற்று இன்புற்று வாழ, தேசிய விளையாட்டுவாரம் தூண்டுவதாக.





# பயணக் கதை

## 11

நம் இந்திய அரசினர் 1961-ஆம் ஆண்டு கல்விக் குழு ஒன்றை சோவியத் ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்தனர். சோவியத் ஒன்றியம் என்பது எது? சாதாரண வழக்கில் ரஷ்ஷியா என்கிறார்களே, அதற்குச் சரியான பெயர் சோவியத் ஒன்றியம். இந்தியக் கல்விக்குழுவில் இருந்தவர் மூவர். அம் மூவரில் நானும் ஒருவன்.

எதற்கு எங்களை சோவியத் ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்தார்கள் தெரியுமா?

அந்நாட்டின் கல்வி முறை, அமைப்பு, நடைமுறை ஆகியவற்றை நேரில் தெரிந்து கொண்டுவர எங்களை அனுப்பினார்கள்.

நாங்கள் அவ்வாண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி புதுடெல்லியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றோம். அந்நாட்டின் விமான வாயிற்படியாகிய டாஸ்கெண்ட் நகரத்தில் முதல் நான்கு நாட்கள்

---

*[5—3—1964-இல் சென்னை வானொலி நிலையத்தில் பேசியது]*

தங்கினோம். டாஸ்கென்ட் என்பது உஸ்பெகிஸ்தான் என்னும் குடியரசின் தலைநகரம். உஸ்பெகிஸ்தான் சோவியத் ஒன்றியத்தில் உள்ள 15 குடியரசுகளில் ஒன்றாகும். டாஸ்கென்டில் பல கல்விக் கூடங்களைப் பார்த்தோம். பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரையில் பார்த்தோம்.

பின்னர், மாஸ்கோ நகருக்குப் பறந்து சென்றோம். அங்கு பத்துநாள் இருந்துவிட்டு, லெனின் கிராட் நகருக்கு இரயில் வண்டியில் சென்றோம். அங்கு இரண்டு நாள் தங்கினோம். பின்னர், விமானம் மூலம், யால்டா என்ற நகருக்குப் பறந்து சென்றோம். அங்கு இரண்டு நாட்கள் தங்கியபின், கீவ் என்ற நகருக்குப் பறந்து சென்றோம். அங்கும் இரண்டு நாட்கள் இருந்தபின் இரயிலேறி மாஸ்கோ வந்து சேர்ந்தோம். மாஸ்கோவில் மீண்டும் ஐந்தாறு நாட்கள் தங்கி பலவற்றையும் பார்த்தோம். அப்புறம் அங்கிருந்து விமானமேறி புதுடெல்லி வந்து சேர்ந்தோம். போன போது இந்திய விமானத்தில் சென்றோம். திரும்பிய போதோ சோவியத் விமானத்தில் வந்தோம். மாஸ்கோ விற்கும் புதுடெல்லிக்கும் உள்ள தூரம் 3831 மைல். இவ்வளவு தூரத்தையும் 9 மணி நேரத்தில் கடந்து வந்து விட்டோம். நெடுந் தொலைவிலுள்ள இடமும் அண்டை வீடாகிவிட்டதை நாங்கள் உணர்ந்தோம். நீங்களும் உணரவேண்டாவா?

சோவியத் ஒன்றியம் முழுவதிலும் எங்களை அன்போடு வரவேற்றார்கள். சோவியத் மக்கள் இந்தியர்களிடம் மிக்வும் பற்றுடையவர்களாக இருந்தனர்.

நம் பிரதமர் நேருவிடம் பெருமதிப்பு இருந்ததைக் கண்டோம்.

சோவியத் நகரங்கள் எப்படியிருக்கின்றன தெரியுமா? அவையெல்லாம் தூய்மையாக உள்ளன. தெருக்களில் எச்சிலும், குப்பையும், கூளமும் காண முடியாது. நடமாடும் மக்கள் எப்படி? சுறுசுறுப்பாயிருந்தனர். அவரவர் வேலையை அவரவர் பார்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். வேலையில்லாது திரியும் சோம்பேறிகளைக் காணவில்லை. காலிகளையும் காணமுடியாது. பிச்சைக்காரர்களாவது உண்டா? அவர்களும் இல்லை.

இப்போது கல்வியின் பக்கம் கவனத்தைத் திருப்புவோம். அந்நாட்டிலுள்ள எல்லாக் குடியரசுகளிலும் கல்வி, கட்டாயமும் இலவசமும். எதுவரை இலவசம்? எல்லா நிலையிலும் கல்வி இலவசமே. தொடக்கக்கல்வி, உயர்நிலைக்கல்வி மட்டுமல்ல; கல்லூரிப் படிப்பும் இலவசமே. கட்டாயக் கல்வி எதுவரை? நாங்கள் போனதற்கு முந்திய ஆண்டுவரை, எட்டாவது வகுப்பு வரையிலே, கட்டாயக் கல்வி நடைமுறையில் இருந்தது. அக்கட்டாயக் கல்வி முறையை உயர்நிலைப்பள்ளி முடியும் வரை நீட்டுவதென்றும், ஆண்டுக்கு ஆண்டு, ஒரு மேல் வகுப்பிற்கு இது செயல் படுவதென்றும் 1961-இல் முடிவு செய்தனர்.

பாடஞ்சொல்லிக் கொடுப்பது மட்டுமல்ல இலவசம். மாணவர்களுக்கு வேண்டிய பாடநூல்களையும் நோட்டுப் புத்தகங்களையும் இனமாகக் கொடுக்கின்றனர். பள்ளிக் கூடத்திலேயே மதிய உணவு கொடுக்கிறார்கள்.

ஆகவே, மாணவர்கள் இவற்றைப் பற்றிய கவலை இல்லாமல் படிக்கிறார்கள்; அக்கறையாகப் படிக்கிறார்கள்.

மாணவ மாணவிகளின் தோற்றம் எப்படி இருக்கிறது? அவர்கள் எல்லோரும் கொழுகொழுவென்று உடல்நலத்தோடு உள்ளனர். எலும்புந்தோலுமான மாணவனையோ மாணவியையோ நாங்கள் எங்கும் காணவில்லை. ஆண்களைப்போல பெண்களும் வாட்டசாட்டமாகவே உள்ளனர். காற்றில் அசைந்தாடும் மலர்க்கொடிகளாக இருக்க சோவியத் பெண்கள் விரும்பவில்லை. ஆண்களோடு சரிநிகர் சமமாக இருந்து எல்லா வேலைகளிலும் அலுவல்களிலும் ஈடுபடுகின்றார்கள்.

அவர்கள் எத்தகைய கல்வி பெறுகிறார்கள்? அவர்கள் என்ன என்ன படிக்கிறார்கள்? அவர்கள் தாய்மொழி, இரஷ்ஷிய மொழி, பிறநாட்டு மொழிகளில் ஒன்று—அதாவது ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு ஆகியவற்றில் ஏதாவது ஒன்று---ஆக மூன்று மொழிகள் படிக்கிறார்கள். டாஸ்கெண்டில் இந்தி கற்கும் மாணவர்களைக் கண்டோம். மேல் வகுப்புகளில் மூன்று மொழிகளும் கட்டாயம். ஆனால் கல்லூரிச் சேர்க்கைக்கு இருமொழித் தேர்ச்சி போதும். மொழிகள் தவிர, கணக்கு, வரலாறு, பூகோளம், பௌதிகம், இரசாயனம், உயிர்நூல் ஆகிய பாடங்களும் சொல்லித் தரப்படுகின்றன. உடற்பயிற்சி நல்ல கவனம் பெறுகிறது. எல்லாப் பாடங்களையும் தாய்மொழிவாயிலாகவே கற்கின்றனர். ஆனால், சில நகரங்களில் இரண்டொரு பள்ளிகளில் ஆங்கிலத்தின் மூலம் கற்பிக்கும் சோதனை அப்போது நடந்துவந்தது.

கைவேலை, தொழிற்பயிற்சி உண்டா? உண்டு. முதல் வகுப்பில் களிமண் வேலை; அடுத்த வகுப்புகளில் காகித, அட்டை வேலைகள்; பின்னர் தச்சு வேலை; அப்புறம் உலோகத்தட்டு வேலை; கடைசி மூன்று வகுப்புகளில் சரியான தொழிற் பயிற்சி உண்டு.

யாருக்குத் தொழிற்பயிற்சி? எல்லா மாணவ மாணவிகளுக்கும் தொழிற்பயிற்சி உண்டு; விரும்புகிற சிலருக்கு மட்டுமல்ல. எவ்வளவு நேரம் தொழிற் பயிற்சி பெறுகிறார்கள்? மேல் வகுப்புகளில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தைத் தொழிற்பயிற்சியில் செலவிடுகிறார்கள். அத் தொழிற்பயிற்சியும், பள்ளிக்கூடத் தொழிற்கூடத்தில் மட்டும் அல்ல; உண்மையான தொழில் நிலையத்தில் மெய்யான தொழிற் சூழ்நிலையில் நடக்கிறது. எல்லோருக்கும் ஒரே தொழிலா? இல்லை. பயிற்சி கொடுக்கும் தொழில்களை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். பயிர்த்தொழில், ஆலைத்தொழில், போக்குவரத்துத் தொழில் ஆகியவை அம்மூன்று பெரும் பிரிவுகள். ஒன்பதாவது முதல் பதினோராவது வரையில் படிக்கும் மாணவ, மாணவிகள் இவற்றில் ஒரு பிரிவில் சேர்ந்து, அது சம்பந்தமான எல்லாப் பயிற்சிகளையும் பெறுகிறார்கள்.

டாஸ்கெண்டில் இருந்தபோது, போக்குவரத்துத் தொழிற்பயிற்சியைக் கண்டோம். அங்கே, மாணவர்கள் பயிற்சிக்கென்றே, தனி மாணவர் இரயில்வே இருக்கிறது. அது சுமார் இரண்டு அல்லது மூன்று மைல் நீளமிருக்கும். அந்த இரயில்வேயை நடத்துவது மாணவர்களே. அவர்களுக்கு வழிசொல்ல இங்கும்

அங்கும் சில பெரியவர்கள் உள்ளனர். மாணவர்களே பல வேலைகளையும் பார்த்துக்கொள்ளுகின்றனர். நாங்கள் அந்த இரயிலில் ஏறி முழு தூரமும் பயணஞ் செய்தோம். பயணிகள் பெட்டிகள் சௌகரியமாகவும் தூய்மையாகவும் இருந்தன.

இப்படி நேரிடைத் தொழிற் பயிற்சி பெறுவதால் படித்த வாலிபர்களும் பெண்களும் அலுவலகத்திற்கும் தொழிலுக்கும் தகுதியானவர்களாக உள்ளனர். 'இது தெரியாது, அது தெரியாது' என்று காலத்தை வீணாக்கும் வாலிபர்கள் இல்லை.

'தரமான தொழிற் பயிற்சி பெறுவதற்கு மூன்றிலொரு பங்கு நேரத்தை ஒதுக்கி விடுகிறார்களே, அவர்களது படிப்பின் தரம் எப்படி?' என்று கேட்கத் தோன்றுகிறதா? அக் கேள்விக்கும் பதில் சொல்லுகிறேன்.

அவர்கள் படிப்பின் தரம் நன்றாக இருக்கிறது. தரமான படிப்பைப்பற்றி எல்லோருக்கும் அக்கறை உண்டு. அது மட்டுமல்ல. மெல்லக்கற்போருக்கு மட்டும் கூடுதல் நேரம் கற்பிக்கும்முறை, அங்கு, கல்வித் திட்டத்திலேயே இணைந்துள்ளது. ஆகவே எல்லோரும் தரமாகப் படித்துவிட முடிகிறது. இவ்வளவு மட்டுமா? மற்றொரு உபாயத்தையும் கையாளுகிறார்கள். அது என்ன? சொல்லுகிறேன் கேளுங்கள்.

கீழ் வகுப்புகளில், மொழிகளுக்கும் வரலாறுபோன்ற மனிதஇயல் பாடங்களுக்கும் ஒதுக்கும் நேரம் அதிகம். ஆனால் வகுப்பு உயர உயர இதைச் சிறிது சிறிதாகக் குறைக்கிறார்கள். மேல் மூன்று வகுப்புகளில், இவற்றிற்

குச் செலவிடும் நேரத்தை விட மற்ற, விஞ்ஞானம் கணக்கு போன்ற பாடங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குகிறார்கள்.

பொதுவாக எல்லோருக்குமானதைச் சொன்னேன். 'எந்த மாணவருக்காவது ஏதாவது ஒன்றில் அதிகப்படி ஆர்வம் இருந்தால், அவருக்கு வழியுண்டா ?' என்று பலர் கேட்கிறார்கள். உண்டு. என்ன வழி ? ஒவ்வொரு பள்ளியிலும் மொழிவட்டம், கணக்கு வட்டம், இசை வட்டம் என்று பலப்பல வட்டங்கள் உண்டு. ஒவ்வொரு மாணவரும் தன் விருப்பம்போல் ஏதாவது ஒரு வட்டத்தில் சேர்ந்து அப்பாடத்திலோ பயிற்சியிலோ அதிகம் வளரலாம். இவ்வேற்பாடும் அவர்கள் கல்வி முறையில் இன்றியமையாத பகுதியாகும். யாரும் இரண்டிற்கு மேற்பட்ட வட்டங்களில் ஒரே நேரத்தில் சேர முடியாது. இப்படிப்பட்ட வட்டங்களின் மூலம் அதிகத் திறமையும் ஆர்வமும் உடையவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கிறார்கள்.

ஒரே வகுப்பில் இரண்டாம் ஆண்டு படிப்பவர்களை நாங்கள் காணவில்லை. எல்லோரும் ஒரே ஆண்டில் மேல் வகுப்பிற்குப் போய்விடும் நிலை எப்படி வந்தது ? கல்வியின் தரத்தைக் குறைத்தா ? இல்லை.

எல்லாப் பள்ளிகளிலும் எல்லா வகுப்புகளுக்கும் மாதச் சோதனை நடத்துகிறார்கள். இரண்டு மாதங்கள் சோதனை நடத்திய பிறகு, யார், யார், எந்தெந்தப் பாடத்தில் போதிய மார்க்குகள் வாங்கவில்லை என்பது தெளிவாகி விடுகிறது. அப்படி மார்க்கு குறைந்த

மாணவர்களுக்கு, அந்தந்தப் பாடத்தில் மட்டும் தனி மேற்பார்வையில் கூடுதலாகச் சொல்லிக்கொடுக்க, பள்ளிக்கூடத்திலேயே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, மெல்லப் படிப்பவர்கள்கூட, ஆண்டு முடிவதற்குள் முன்னேறி போதிய எண்கள் பெற்று விடுகிறார்கள். அதுமட்டுமா? பரிட்சை முடிவு, காலாண்டு, அரையாண்டு, ஆண்டுப் பரிட்சைகளை மட்டும் பொறுத்ததல்ல. மாதச் சோதனை மார்க்குகளையும் பருவப் பரீட்சை மார்க்குகளையும் சேர்த்துக் கவனித்தே 'தேர்வு' கூறுகிறார்கள். அதனால், தேக்கம் என்பது அந்நாட்டில் இல்லை. தேக்கத்தினால் வரும் நீக்கமும் அங்கு இல்லை.


இவை இருக்கட்டும்; பள்ளிக்கூடங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டாவா? பள்ளிக்கூடக் கட்டடங்கள் பல, வேறு வேலைகளுக்காகக் கட்டப்பட்டவை; பழையவை; ஆனால் தூய்மையானவை. போதிய வெளிச்சம் உடையவை. பழைய தளவாடச் சாமான்களும் நம் பள்ளிகளில் இருப்பவை போலவே. ஆனால் புதிதாகச் செய்யும் சாமான்கள் நவீனமானவை. இப்போதெல்லாம், ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு தனி நாற்காலி மேசை கொடுக்கும் முறையில் தளவாடங்கள் செய்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் துணைக் கருவிகளும் நிறைய உண்டு. நூல் நிலையங்கள் உண்டா? உண்டு. தொடக்கநிலைப் பள்ளியில்கூட ஆயிரம் இரண்டாயிரம் நூல்கள் கொண்ட நூல் நிலையங்கள் உள்ளன. உயர்நிலைப் பள்ளிகளில் இன்னும் அதிகம். அந் நிலையங்கள் பயன்படுகின்றனவா? நன்றாகப் பயன்

படுகின்றன. உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் மிகப் பெரும்பாலோர் ஆண்டிற்கு முப்பது நாற்பது நூல்களைப் படித்து முடித்து விடுகிறார்கள். நூல்களைப் படிப்பதிலே, சோவியத் மக்களுக்கு இணை அவர்களே. மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்ல, சாதாரண தொழிலாளிகளெல்லாம் நூல் நிலையங்களி லிருந்து தாராளமாக நூல்களை எடுத்துப் படிப்பதைப் பார்க்கலாம். என்ன நூல்கள் படிக்கிறார்கள்? வெறும் கதைகளா? வெறும் பொழுதுபோக்கு விகடத் துணுக்குகளா? இல்லை. அறிவுப் பெருக்கத்திற்கான நூல்கள். சிந்தனையைத் தூண்டும் நூல்கள். ஐம்பது வயதிற்கு மேற்பட்ட முதியோர் பலர் இரவுப் பள்ளியில் சேர்ந்து அந்த வயதில் பிற நாட்டு மொழியொன்றைப் புதிதாகக் கற்பதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தோம்.

மீண்டும் பொதுக் கல்வியைப் பற்றிப் பார்ப்போம். கல்லூரிப் படிப்பும் இலவசம் என்று சொன்னேன் அல்லவா? கல்லூரியில் எளிதாக இடம் கிடைக்கிறதா? இல்லை. ஏறத்தாழ மூன்றில் ஒருவருக்கே கிடைக்கும். கல்லூரிச் சேர்க்கை, தகுதி பற்றித்தான் கிடைக்கும். இடம் கிடைக்காத இரண்டு பங்கு பேர்கள் என்ன செய்வது? அவர்களுக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக் கும். வேலையில் சேர்ந்தபிறகு, மாலைக் கல்லூரிகளில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றுக் கொள்ளலாம். மாலைக் கல்லூரிகளிலும் இலவசப் படிப்பே. ஆகவே, பகல் நேரக் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்கள் எதிர் காலம் பாழாவதில்லை.

இப்படி எல்லோருக்கும் கல்வி, எப்போதும் கல்வி, எந்நிலையிலும் இலவசக்கல்வி என்று இருக்கிறது. அதை மக்களும் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். எனவே வெள்ளத்தின் பெருக்கைப்போல் கல்விப்பெருக்கும் கலைப்பெருக்கும் காண முடிகிறது. நாமும் கல்வியில் கருத்தாயிருந்து வளர்வோமாக. நன்றாக வாழ்வோமாக.





# இங்கிலாந்தின் கல்வி முறை

## 12

ஆங்கில நாட்டுக் கல்வியின் சிறப்புகள் பல. அவற்றுள் முதன்முதலாக என்னைக் கவர்ந்தது எது தெரியுமா? எல்லோர்க்கும் கல்வி என்ற முறை. இதிலென்ன சிறப்பு என்று மலைக்காதீர்கள். 'எல்லோர்க்கும்' என்பதில் யார் யார் அடங்குகிறார்கள். சிந்தியுங்கள்; சொல்லுங்கள் பார்க்கலாம்.

நகரத்தில் இருப்பவரும் நாட்டுப்புறத்தில் இருப்பவரும் என்பீர்கள். உண்மை; இருப்பினும் முழு உண்மையல்ல. மேலும் ஊகியுங்கள். ஆணும் பெண்ணும் அதில் சேர்வார்கள் என்கிறீர்களா? சரி. இன்னும் பொருள் முடியவில்லை. 'ஏழையும் பணக்காரரும்' அச்சொல்லில் அடங்குகிறார்கள். இதுதானே அடுத்த விளக்கம்? ஒப்புக்கொள்ளுகிறேன். இன்னும் இருக்கிறதே! எது? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். தெரியவில்லையா? சரி, நானே சொல்லிவிடுகிறேன்.

எல்லோர்க்கும் என்பதில் அந்நாட்டவரும் பிற நாட்டவரும் அடங்கி விடுகின்றனர். அந்நாட்டுக்குடிகளுக்கு உள்ள கல்வி வாய்ப்புகள் அங்கிருக்கும் பிற நாட்டவர்களுக்கும் உண்டு. ஆங்கிலநாட்டுக் கல்விக்

கூடங்களில் ஆங்கிலேயக் குழந்தைகளே படிக்கும் என்று எண்ணி ஏமாந்துவிடாதீர்கள். பலநாட்டுக் குழந்தைகளும் படிக்கிறார்கள். பலநிறக் குழந்தைகளும் படிக்கிறார்கள். சமவாய்ப்புகளோடு படிக்கிறார்கள். சமஉரிமையுடன் படிக்கிறார்கள். ஒன்றாயிருந்து படிக்கிறார்கள். நிறம், சமயம் முதலிய வேற்றுமைகளால் ஒதுக்கப்படாமல் படிக்கிறார்கள். "ஓகோ அப்படியா! இன்னும் என்ன பொருள் 'எல்லோர்க்கும்' என்ற சொல்லுக்கு?" இதுவா உங்கள் கேள்வி.

'எல்லோர்க்கும்' என்ற சொல்லில் எல்லா வயதினரும் அடங்குகின்றனர். 'படிக்கும் வயதினர்' என்ற தனிப்பிரிவு அங்கு இல்லை. ஏன்? சாதிகளை அறியாத நாடல்லவா? எல்லா வயதினரும் படிக்கமுடியும் என்பது அவர்கள் கொள்கை. ஆகவே இளைஞர்கள் மட்டுமல்ல, நடுவயதினரும் முதியோரும் படிக்க வாய்ப்புகள் ஏராளம்.

அப்படியானால், காலமெல்லாம் கல்விக்கூடம் சென்று கொண்டே இருக்கவேண்டுமா? அப்புறம் பிழைப்பு என்ன ஆவது?

அந்நாட்டில், பதினைந்து வயது முடிய எல்லோர்க்கும் கட்டாயக் கல்வி; முழுநேரக்கல்வி. எந்த வயது முதல்? ஐந்து வயது முதல். ஆகவே பத்தாண்டுக் காலம் கட்டாயக்கல்வி. கல்வி, ஆணுக்கும் கட்டாயம், பெண்ணுக்கும் கட்டாயம். நகர்களில் மட்டுமல்ல; நாடு முழுவதுமே, கட்டாயக்கல்வி. ஏட்டிலா, நடைமுறையிலா கட்டாயம்? ஏட்டிலும் கட்டாயம்; நடைமுறை

யினும் கட்டாயம். கல்விக்குத் தப்புவோர் அங்கில்லை. பதினைந்து வயதிற்குட்பட்டவர்களை எந்த வேலைக்கும் அமர்த்திக்கொள்ளக்கூடாது என்பது சட்டம். இதுவும் சரியானபடி நடைமுறையில் உள்ளது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது குற்றம் ஆகும்.

பள்ளிக்கூடத்திற்குச் சம்பளம் கட்டவேண்டுமா? இல்லை. கல்வி இலவசம். எல்லோர்க்கும் இலவசம். கோடீசுவரர் வீட்டுக் குழந்தைகளுக்கும் இலவசம். ஆகவே, 'வருமானச்சான்று' தேவை இல்லை. அதைத் தணிக்கை செய்வதில் பள்ளிக்கூடநேரம் விணுவதில்லை. இன்னும் ஏதாவது வசதிகள் உண்டா? உண்டு.

பாடப்புத்தகங்களும், குறிப்புப் புத்தகங்களும் இலவசம். இதற்கும் வரும்படி வரம்பு கிடையாது. எல்லோருக்குமே, காசு வாங்காமல் கொடுக்கிறார்கள். பாலும் இனமாகக் கொடுக்கிறார்கள். தொடக்கப்பள்ளி வயதினருக்கா? இல்லை. உயர்நிலைப்பள்ளிக்கூடங்களிலும் சர்க்கார் செலவில் பால் உண்டு. குடிக்கிறார்களா? ஆம். பத்தாம் வகுப்பில் இருப்பவர்கள்கூட காலை 10-30 மணிக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு புட்டிப் பால் குடிக்கிறார்கள். மொத்தத்தில் நூற்றுக்கு 85 மாணவ மாணவிகள் பால் குடிக்கிறார்கள். கொடுக்கும் பால் எப்படி? 'பால்' என்றால் பாலே!

நடுப்பகல் உணவும் பள்ளிக்கூடத்திலேயே கொடுக்கிறார்கள். எப்படிப்பட்ட உணவு? சுடச்சுட உணவு. சத்தான உணவு. உணவு இலவசமா? தேவைப்படுபவர்களுக்கு இலவசம். தேவைப்படுபவர்கள் என்று எப்படி முடிவு செய்வது? பெற்றோர் வரு

மானத்தைக் கொண்டு. இது ஒன்றிற்கே வருமானம் என்ன என்று கேட்கிறீர்கள். வருமான உச்சவரம்பு அதிகம். அதற்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களே, குழந்தைகள் சாப்பாட்டிற்காகப் பாதிக் கட்டணம் மட்டும் கொடுக்கவேண்டும். யாரிடமும் முழுக்கட்டணம் வாங்குவதில்லை.

பாலும் உணவும் போதிய அளவு கிடைத்தால் மாணவ மாணவிகள் எப்படி இருப்பார்கள்? கேட்க வேண்டுமா? கொழுகொழுவென்று இருக்கிறார்கள். பையன்கள் மட்டுமா? பெண்களுந்தான். உடல் வளர்ச்சியிலும் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை, அந்நாட்டிலே. ஒசிந்து ஆடும் மலர்க் கொடிகளாக இருக்க ஆசைப் படுவதில்லை, அந்நாட்டுப் பெண்கள். உடல் வலிமையோடு மகிழ்ச்சியும் இருக்கிறது எல்லோரிடமும். சுறுசுறுப்பும் ஒழுங்கும் ஒன்றுபட்டுள்ளன.

பள்ளிக்கூடநிலை எப்படி? கட்டடங்களைக் குளிர் காலத்தில் கதகதப்பாகவும் கோடைகாலத்தில் காற்றோட்டமாகவும் இருக்கும்படி கட்டியுள்ளனர். தளவாடங்கள் எப்படி? ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி மேசை நாற்காலி கொடுப்பதே இப்போதைய முறை.

படிப்பு எப்படி எனக் கேட்கத் துடிக்கிறீர்களா?

அங்குக் குழந்தைகளின் இயல்பையொட்டியே படிப்பு. இந்த வகுப்பில், இந்த மாதத்தில் இன்ன பாடத்தில் இத்தனைப் பக்கங்கள் படித்தாகவேண்டும் என்கிற முறை இங்கிலாந்தில் கிடையவே கிடையாது. பின் எதுதான் பாடத்திட்டம்? அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டமென்பதே கிடையாது. நம்பமுடிய

வில்லையா? முடியாதுதான். உண்மையை ஏற்றுக் கொள்வது கடினமே. பாடத்திட்டமே இல்லாத கல்வி முறை உலகில் வேறு எங்கும் கிடையாது. இங்கிலாந்து ஒன்றில் மட்டுமே உண்டு. வாரத்திற்கு வாரம் பாடத் திட்டப்பிரிவு போடுவதிலேயே நேரத்தை வீணாக்கிப் பழகிய நமக்கு, இது திடுக்கிடவைக்கும் செய்தியே.

அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டம் இல்லாததால், அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களும் அங்குக் கிடையா. அப்படியானால் பள்ளிக்கூட வேலைகள் எப்படி நடக்கின்றன?

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒவ்வொரு பாடத்திலும், எவ் வகுப்பில் எவ்வளவு கற்பிப்பது என்று திட்டம் போட்டுக் கொள்கிறார்கள். அதை நடத்திப் பார்க்கிறார்கள். அனுபவத்தையொட்டிக் கூட்டிக்கொள்வார்கள், அல்லது குறைத்துக்கொள்வார்கள். 'நீக்குப்போக்கு' உரிமையும் பள்ளிக்கூடங்களுக்கே. போட்டுக்கொண்ட திட்டத்திற்கேற்பப் பாடநூல்களைப் பொறுக்கியெடுத்துக் கொள்ளுவது வழக்கம்.

இப்படித் தனித்தனிப் பாடத்திட்டம் போட்டுக் கொண்டால், பள்ளியிறுதியில் எந்நிலையை அடைவது? பள்ளிப்படிப்பை முடித்ததும், 'பொதுக்கல்விச் சான்றுப் பரீட்சை' எழுதலாம். இப்பரீட்சையை அரசினர் நடத்துகின்றனர். எல்லோரும் எழுத வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. சர்க்கார் வேலைக்கு ஆசைப்படுகிற வர்கள் எழுதித் தேறவேண்டும்; மேல் படிப்பிற்குப் போக விரும்புவோர் எழுதித் தேறவேண்டும். அதில்

பெற வேண்டிய தரத்தை மனதிலே கொண்டு பாடத் திட்டம் போட்டுக் கொள்ளுகிறது. ஒவ்வொரு பள்ளியும். இதிலென்ன லாபம் என்று கேட்கிறீர்களா? ஆசிரியர் கள், குழந்தைகளின் நிலைக்கேற்ப இயன்றபடி இயன்ற வேகத்திலே பாடத்தைச் சொல்லிக்கொடுக்கலாம். மாணவர்களும் ஓட்டக்கெடுபிடி யில்லாமல், நிம்மதியாக கிரகித்துக் கற்கமுடியும். இவ்வளவும் செய்தும் குறைந்த மதிப் பெண்கள் பெறுபவர்கள் சிலர் இருக் கலாம். அவர்களுக்கும் கூடுதலாகப் பாடஞ் சொல்லிக் கொடுக்கவும் முடியும். ஆகவே எல்லோரும் ஒவ்வொரு ஆண்டும் தவருமல் தேற முடிகிறது. இது பெருத்த இலாபமல்லவா? இதைவிட என்ன இலாபம் வேண்டும்?

நம், பத்தாவது பரீட்சை போலவா இப்பரீட்சை? இல்லை. பத்தாவது பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் ஒரே மூச்சில் தேறினல் மட்டுமே தேர்ச்சி. அப்போது தான் கல்லூரிக்குச் செல்லலாம். இல்லாவிட்டால் 'சர்ட்டிபிகேட் பூர்த்தி'. அவ்வளவே. இங்கிலாந்தில் சாதாரணமாக ஐந்து பாடங்களில் தேறினல்போதும். ஐந்துக்கும் ஒரே மூச்சில் பரீட்சை எழுதித் தேற வேண்டியதில்லை. முடிந்தால் அத்தனையும் எழுதலாம். முடியாவிட்டால் ஒன்றிரண்டு பாடங்களாகப் பரீட்சை எழுதலாம். அப்படியே தேறி, இரண்டு மூன்று ஆண்டு களில் போதிய தேர்ச்சிபெற்றுக் கல்லூரிப் படிப் பிற்கோ, அரசாங்க வேலைக்கோ செல்லலாம். ஆகவே அவர்கள் பொதுப்பரீட்சை, 'எல்லாப்பாட' பரீட்சை யல்ல.

இப்பேற்றைப் பெறுவதற்காகக் கட்டாயக் கல்வி வயதிற்குப் பிறகும் பலர் பள்ளிகளில் படிக்கிறார்கள். அவர்களுக்கும் கல்வி இலவசம். பாட புத்தகங்கள் இலவசம், குறிப்புப் புத்தகங்கள் இனாம் பாலும் இனாம். உணவும் உண்டு.

பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக்கோ தொழிற்படிப்பிற்கோ போவோர் பலர். அதை விட அநேகர், ஏதாவது அலுவலில் சேர்ந்து சம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், தொடர்ந்து கல்வி பெற அநேக அமைப்புகள் உள்ளன. அவை முதியோர் கல்விக்கூடங்கள். அவற்றில் வேளைப்படிப்பிற்கு ஏராளமான ஏற்பாடுகள் உண்டு. நூறு, வெவ்வேறு வகையான பாடப் பிரிவுகள் உள்ளன. ஆகவே எல்லா வயதினரும் தொடர்ந்து விரும்பிப் படிப்பதைக் காணலாம். இதிலும் ஆண்களுக்குப் பெண்கள் இளைத்தவர்கள் அல்லர்.

இங்கிலாந்தில் குடியிருக்கும் எல்லா நாட்டவருக்கும் எல்லா வயதினருக்கும் போதிய கல்வி வாய்ப்புகள் உள்ளன. சலுகைகள் உள்ளன. பாட உரிமையும் உண்டு. பலனே? வெள்ளத்தின் பெருக்கைப் போல் அறிவும் ஆற்றலும் பெருக்கெடுக்கின்றன. விளைவு? சிந்தையில் ஆயிரம் எண்ணம் சிறந்து வளரும் சூழ்நிலை. நாமார்க்கும் குடியல்லோம் என்ற பெருமிதம், சுதந்திரத்திற்கு எங்கே பங்கம் நேரினும் விரைந்து உதவும் தாராள மனம், தன்னடக்கத்தோடு இணைந்த நல்லாண்மை ஆகியன மலர்கின்றன.

எங்கே பிறந்தவர்களும் எப்பதவிக்கும் உயரும் நிலையும் பள்ளத்தில் இருந்தோரும் பதவிபெறும் வாய்ப்பும் ஏற்படுகின்றன. ஆயிரம் ஆயிரம் ஒளி கொள் விழியில் இறக்கை கட்டிப் பறந்து பணிபுரிவோர் பலராகின்றனர்.



# அமெரிக்காவில் கண்டதும் கேட்டதும்

## 13

நான், அண்மையில் அமெரிக்கா சென்று வந்தேன். எதற்காக? அங்குள்ள கல்வி முறைகளையும் திட்டங்களையும் காணச் சென்றேன். அமெரிக்கக் கூட்டாட்சி சர்க்கார் அழைப்பின்பேரில் சென்றுவந்தேன். அங்கு ஏழு வாரங்கள் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தேன். பாலர் பள்ளி முதல், பல்கலைக் கழகங்கள் வரை பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. பலநிலைக் கல்வியாளர்களோடு கலந்து பேசும் வாய்ப்பும் கிடைத்தது.

அமெரிக்காவின் முழுப்பெயர், அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்பதாகும். இது ஐம்பது இராச்சியங்கள் கொண்ட ஒரு கூட்டாட்சியாகும். இது பரந்த நாடு. செல்வம் கொழிக்கும் நாடு. இந்நாட்டின் மக்கட்டொகை 19 கோடியைத் தாண்டி 20 கோடிக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

இந்நாடு தொழில்துறையில் மிக வளர்ந்துள்ளது. அதேபோல் பயிர்த் தொழிலிலும் சிறந்துள்ளது. விஞ்ஞான அடிப்படையில் பயிரிடுகிறார்கள். நவீன

[சென்னை வானொலி நிலையத்தில் 19—11—1964 அன்று நிகழ்த்திய உரை]

கருவிகளின் துணையோடு பயிர் செய்கிறார்கள். இரசாயன உரங்களைப் பயன்படுத்துகிறார்கள். சேதாரம் இல்லாமல் சாகுபடி செய்கிறார்கள். கொள்ளை விளைச்சல் காண்கிறார்கள். பயன் என்ன? உயர்ந்த வாழ்க்கைத் தரம், பலபேருக்கு.

அமெரிக்க மக்கள் உடல் வலியும் உள்ளவலியும் உடையவர்கள். சுறுசுறுப்பானவர்களும் கூட. தாக்குப் பிடிக்கும் சக்தி மிகுந்தவர்கள், அவர்கள். அவர்கள் அலுவலகங்கள் - அரசினர் அலுவலகங்கள்கூட - காலை 9 மணிக்குத் தொடங்கிவிடுகின்றன. மாலை 5 மணிவரை வேலை செய்கின்றன. முழு நேரமும் வேலை செய்கிறார்கள், அந்த அலுவலகங்களில் உள்ளவர்கள். காலத்தை வீணாக்காமல் பணிபுரிகிறார்கள். அலுவலக முறையும் விரைவாக முடிவு செய்யக்கூடியவகையில், எளிதாக அமைந்திருக்கிறது. நம்பிக்கை என்ற அடிப் படையில் அமைந்திருக்கிறது. எனவே, நம்மைவிட அதிக நேரம் உழைப்பதோடு மட்டுமல்லாமல், பல மடங்கு அதிக வேலை செய்ய முடிகிறது. சட்சட்டென்று எடுத்த வேலைகளை முடித்துத் திருப்தி கொள்ள முடிகிறது.

செல்வ நாட்டினர்கூட, நம்மைவிட அதிகம் உழைக்கிறார்கள். வறுமையில் இருந்து மீள வேண்டிய நாமும் அதிகம் உழைத்தாலல்லவா வளரமுடியும்? உழைப்பும் உடனுக்குடன் பலன்கொடுக்கும் முறையில் அமைந்தாலல்லவா, திரண்டு வரும் வேலைகளை விரைந்து முடித்து நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியும். இப்

படிப்பினைகளை நான் கற்றேன். ஒருவன் கற்ருல் போதுமா? நீங்களும் கற்கவேண்டுமே!

அமெரிக்க நகரத் தெருக்களில் சாரைசாரையாகக் கார்களைக் காணலாம். பல சமயங்களில் அவை ஓடுவதற்குப் பதில் நகர்ந்து செல்லும். காரணம், போக்குவரத்து நெரிசல். 'பஸ்'களுக்காகக் காத்திருக்கும் நீண்ட 'க்யூ'வும் பல ஊர்களில் காலையும் மாலையும் காணும் சாதாரணக் காட்சி.

தன்னிச்சைப்படி அலைந்து திரியும் ஆடுமாடுகளை அந்நாட்டுத் தெருக்களில் காணவில்லை. ஏன்? ஊர்களுக்குள் ஆடுமாடுகளின் நடமாட்டமே இல்லை. நாய்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடுகின்றனவா? இல்லை. நடுத்தெருவில் படுத்து வெய்யில் காயும் நாய்களை அந்நாட்டில் காணமுடியாது.

மனிதர்கள் எப்படி? சுதந்திரமாக நடுத்தெருக்களில் நின்று பேசிக் கொண்டிருப்பார்களா? நடுச்சாலையில் நிதானமாக நடந்துகொண்டிருப்பார்களா? எந்த இடத்தில் வேண்டுமானுலும் தெருக்களைக் குறுக்கே கடந்து செல்வார்களா? இக்காட்சிகளும் அங்கு கிடையா. நடப்பதென்ருல், சாலையோரமே நடப்பர். தெருவைக் கடப்பதென்ருல், அதற்கென்று குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே கடப்பர்.

தெருக்களில் தூய்மை எப்படி? அமெரிக்கர் குப்பை கூளங்களைத் தெருக்களில் போடுவதில்லை. ஆகவே அழுக்குக் குறைந்த தெருக்களையே காணலாம். தெருக்களில் எச்சிலைக் காணமுடியுமா? சளியைப் பார்க்கலாமா? இவ்விஷயத்தில் அமெரிக்கர்கள் பெருங்

கருமிகள். நம்மைப் போன்ற வள்ளல்களாக இல்லை. அவர்கள் பொதுஇடங்களில் கண்டபடி எச்சில் துப்புவதில்லை. நினைத்தபக்கம் சளியைச் சிந்திப் போடுவதில்லை. சிந்தித் தேய்ப்பதும் இல்லை. ஆகவே பொது இடங்களெல்லாம் அழுக்குக் குறைந்து தூய்மை மிகுந்து இருக்கின்றன.

சரி, இப்போது அவர்களுடைய கல்விமுறையைக் கவனிப்போம்.

அமெரிக்கர்களுக்கு, கல்வியின்பால் அசையாத நம்பிக்கை இருக்கிறது. 'கல்வி' என்பதை அவர்கள் குறுகிய அளவில் கொள்ளவில்லை. குறைந்தது பள்ளியிறுதி வரையிலாவது படிந்து முடிக்காத வாலிபன், பெண் 'பொருளாதாரத் தற்கொலை' செய்து கொள்ளுவதாக அவர்கள் நினைக்கிறார்கள், பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்.

அமெரிக்காவில், 'கல்வி' யென்பது மத்திய அரசினர் விவகாரமல்ல. இராச்சிய அரசின் விவகாரம். இராச்சிய அரசே எல்லாநிலைக் கல்விக்கும் பொறுப்பு. ஆயினும் கல்வியின் கால அளவில் ஒருமைப்பாட்டைக் காணலாம். பள்ளிப்படிப்பு என்பது எல்லா இராச்சியங்களிலும் பன்னிரண்டு ஆண்டுப் படிப்பு. பன்னிரண்டு ஆண்டுக் காலமும் கட்டாயம் படிக்கவேண்டுமா? கட்டாயக்கல்விக் காலம் வேறுபடுகிறது. பெரும்பாலான இராச்சியங்களில் முதல் பத்தாண்டுப் படிப்பே கட்டாயம். மேலும் இரண்டொரு ஆண்டுப் படிப்பை கட்டாயமாக்கும் இராச்சியங்களும் இரண்டொன்று உள்ளன. எந்த வயதில்

கட்டாயக் கல்வி தொடங்குகிறது? அனேகமாக ஆறாவது வயதில் தொடங்குகிறது.

கல்வி யாருக்கு எதுவரையில் இலவசம் என்று தெரிந்துகொள்ள வேண்டாவா? கல்வி எல்லோருக்கும் இலவசம். ஏழை, பணக்காரர் என்று பிரித்து, இலவசக் கல்வி கொடுப்பதில்லை. பன்னிரண்டாவது வகுப்பு முடிய இலவசக்கல்வி கொடுக்கிறார்கள். பாடநூல்கள் இலவசமாகக் கிடைக்கின்றனவா? ஆம். மிகப்பெரும்பாலான இராச்சியங்களில், எல்லோருக்குமே இலவசப் பாடநூல்களும். குறிப்பு நூல்களும் கொடுக்கிறார்கள். சில இராச்சியங்களில் மட்டும், இப்போதைய நிதி நிலைமை சரியாக இல்லாததால் ஏழைகளுக்கு மட்டும் இவ்வசதி இலவசமாகக் கிடைக்கிறது.

தொடக்கக்கல்வி எத்தனை ஆண்டு, உயர்நிலைக் கல்வி எத்தனை ஆண்டு, என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்களா? நல்லது. இதில் எவ்வளவோ வேறுபாடுகள். இராச்சியத்திற்கு இராச்சியம் வேறுபாடுகள். இராச்சியம் முழுவதுங்கூட ஒரே மாதிரியான அமைப்பு இல்லை. ஒரே இராச்சியத்தில்கூட, மாவட்டத்திற்கு மாவட்டம் அமைப்பிலே வேறுபாடு காணலாம். ஆறாண்டுத் தொடக்கக் கல்வி, மூவாண்டு இளையோர் உயர்நிலைக் கல்வி, மூவாண்டு மூத்தோர் உயர்நிலைக்கல்வி என்பது சாதாரண பாகுபாடு. எட்டாண்டுத் தொடக்கக் கல்வி, நான்காண்டு உயர்நிலைக் கல்வி என்ற பிரிவுகளையும் காணலாம். பன்னிரண்டு ஆண்டுப் படிப்பை ஏழு, இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பிரிப்பதும் காணக்கூடாததல்ல. நாடு முழுவதும்

...NEMARA PUBLIC LIB...

கல்விப்பரம்பு அடிக்க நினைக்கும் நாம், இவ்வேறுபாடுகளைப்பற்றிச் சிந்தித்தல் நல்லதல்லவா?

கல்லூரிக்கல்வி எத்தனை ஆண்டு? முதல் பட்டப் படிப்பு நான்காண்டுப் படிப்பு. ஆகவே பதினாறு ஆண்டு படித்தால்தான் பி. ஏ., அல்லது பி. எஸ்ஸி. பட்டம் பெற முடியும். சில பகுதிகளிலே இரண்டாண்டுக் கல்லூரிகள் வைத்திருக்கிறார்கள். அவற்றில் படித்துத் தேறினால் பட்டம் கிடைக்காது. ஆயினும் இப்படிப்பு வீண் போவதில்லை. நான்காண்டுப் பட்டப்படிப்பின் முதல் நிலையாக, இக்கல்லூரிப் பாடமும் அமைந்திருக்கிறது. ஆகவே மாணவர்கள் பக்கத்திலுள்ள இரண்டாண்டுக் கல்லூரியில் படித்துத் தேறியபின் தொலைவிலுள்ள பெருங் கல்லூரியில் சேர்ந்து மேலும் இரண்டாண்டு படித்து பட்டம் பெற்றுவிடுகிறார்கள்.

பள்ளிக்கூட மாணவர்களின் தேர்ச்சியைப் பற்றிச் சொல்லுகிறேன். 'உங்கள் பள்ளிகளில் எவ்வளவு தேக்கம் இருக்கும்?' என்று வினவினேன். 'தேக்கம்' என்றால் அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரே வகுப்பில் மாணவனோ, மாணவியோ இரண்டாவது ஆண்டு படிப்பதே 'தேக்கம்' என்று விளக்கினேன். ஏன் தேங்க வேண்டுமென்பதே அவர்கள் கேள்வி.

ஒரே வகுப்பில் இரண்டாவது ஆண்டு படிக்கும் மாணவனை, வைக்கோற் போரில் ஊசி தேடுவது போல் தேடவேண்டும். காரணம்? அவர்களது குறிக்கோள் தெளிவு. பள்ளிக்கூடம் கற்கவைத்துத் தேறவைக்கவே இருக்கிறது என்பது அவர்கள் நம்பிக்கை. நிறுத்தி வைக்கப் பள்ளிக்கூடம் ஏன் என்று கேட்கிறார்கள்.

அடிக்கடி சோதனை நடத்துகிறார்கள். எனவே எந்த மாணவன் எதிலே பின்னடைகிறான் என்று இரண்டொரு வாரங்களில் தெரிந்து விடுகிறது. அப்புறம் மேற் பார்வைப் படிப்பு, தனிக்கவனம் ஆகிய பல உபாயங் களின் மூலம் அநேகமாக எல்லோரையும் தேர்வுபெறத் தகுதி உடையவர்களாக்கிவிடுகிறார்கள். 'குபேரநாட்டு' ஆசிரியர்கள் தேக்கிவைத்துக் காலத்தையும் பணத்தை யும் வீணாக்கவில்லை. நாம் மட்டும் தேக்கி வைத்து, காலத்தையும் பணத்தையும் வீணாக்கி மகிழலாமா என்ற சிந்தனை பிறந்தது.

பள்ளிக்கூடங்கள் தனியார் துறையிலா, பொதுத் துறையிலா? நூற்றுக்குத் தொண்ணூறு பள்ளிக் கூடங்கள் பொதுத் துறையில் நடக்கின்றன. இராச்சிய அரசுகளின் சார்பில், பள்ளிக்கூடப் போர்டுகள் அவற்றை நடத்துகின்றன. மீதியுள்ள பத்தில், அநேகம் மதச் சபைகள் சார்பில் நடக்கின்றன. அமெரிக்காவில் தனியார் பள்ளிகளுக்கு அரசு மான்யம் கிடையாது. நன்கொடை வசூலின் மூலமே அவை நடக்கவேண்டும்.

ஆசிரியர்கள் தகுதி, நிலை எப்படி? தொடக்கப் பள்ளி ஆசிரியர்கூட பி. ஏ., அல்லது பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவராயிருக்க வேண்டும் என்பது இப்போதைய விதி. பலர் எம். ஏ., பட்டம் பெற்றிருக்கிறார்கள். அநேக இராச் சியங்களில் ஆசிரியத்தொழிலில் கிடைக்கும் சம்பளத் திற்கும், அதே தகுதியுடையவர்களுக்குப் பிறதொழில் களில் கிடைக்கும் சம்பளத்திற்கும் அதிக வேற்றுமை இல்லையாம். ஆயினும் ஆசிரியத் தொழில் சங்கங்கள் கேட்கும் அளவு சம்பள விகிதம் உயரவில்லையாம். சில

இராச்சியங்களில் இன்றும் ஆசிரியர் சம்பளம் கட்டை தான். ஆயினும் ஆசிரியர் சம்பள விகிதத்தில் ஒரு சிறப்பைக் கண்டேன். அது என்ன? தகுதி உயர்விற்கு ஏற்ப, சம்பள உயர்வும் கொடுக்கப்படுகிறது. முதல் வகுப்பு ஆசிரியர் எம். ஏ. பட்டம் பெற்றுர் என்ருல், உடனே சம்பளம் கூடிவிடும். எம். ஏ. பட்டதாரிக் கான இடம் காலியாகும்வரை காத்திருக்கத் தேவையில்லை. தகுதியை உயர்த்திக்கொள்ள வாய்ப்புகள் உண்டா? உண்டு. ஏராளமாக உண்டு.

நம் நாட்டிலும் வாய்ப்புகள் பெருகுவதாக, வளங்கள் சுரப்பதாக் என்று வாழ்த்தி முடிக்கிறேன்.

